ஜனவரி 2006

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி விற்பனை

# நாடாளுமன்றம் விற்பனைக்கு!

## மலிவு விலையில் எம்.பி.க்கள் தயார்!

**இங்கு**

**மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்.பி.க்கள் விற்கப்படும்.**

**தூங்கிய நேரம் போக,**

**கேள்வி கேட்க - கேட்காமலிருக்க,**

**வெளிநடக்க - உள்ளிருக்க,**

**"ஹவர்" கணக்கிலும் ஆட்கள் கிடைக்கும்!**



முக்கிய அறிவிப்பு:

**வீடியோ, காமிரா அனுமதிக்கப்பட மாட்டாது.**

**எங்களுக்கு நாடாளுமன்றம் தவிர வேறு எங்கும் கிளைகள் இல்லை.**

ஞாயிறும் விற்பனை உண்டு!

ஜெய்ஹிந்

---

பு... ஜனவரி 2006 ...ச.13--
...தெகல்கா ஆயுதபேர
...ஊழல், கார்கில்
...பட்ட ஊழல்)
...ில்
...இப்
...ஊழ
...இருக்
11 எம்...
...இந்த
...ாதா
...பிரச
...ாதா
...ா் பகுஜ... மாஜ ஆகிய
...சிகளைச் சேர்ந்த 11
...பி.க்கள் இந்த லஞ்ச
...ழல் விவகாரத்தில் சிக்கி
...ளனர்.
...ாராளுமன்றத்தில்
...ள்வி கேட்பதற்காக
...பர்கள் லஞ்சம் வாங்கி
...த ஒரு தனியார் டெலி
...ஷன் ரகசியமாக படம்
...த்து அம்பலப்படுத்தி
...க்கிறது.

...ாராளுமன்றத்தில் கேள்வி

...ாராளுமன்றம் கூடும்
...களில் தினமும் முதல்
... மணி நேரம் கேள்வி
...தில் நிகழ்ச்சி இடம்பெ
... 'எம்.பி.'க்கள் எழுப்
... கேள்விகளுக்கு
...பந்தப்பட்ட இலாகாக்
...ின் மந்திரிகள் பதில்
...ிப்பார்கள்.
...கள்வி நேரத்தின்போது
...ங்கள் கேட்க இருக்கும்
...ள்விகளின் பட்டியலை
...பி.'க்கள் முன்கூட்
...ய எழுதி கொடுத்து
...வேண்டும். இப்படி
...ள்வி கேட்பதற்கு கூட
...பி.'க்கள் சிலர் லஞ்சம்
...ங்குவதாக கூறப்படு
...து.

சந்திப்பு

...தை ஆதாரப்பூர்வமாக நிரு
... தீர்மானித்த 'ஆஜ்தக்' என்ற
... செய்திச் சேனல் 'டி.வி.'
...சம் வாங்கும் எம்.பி.க்களை
...றி' வைத்து பிடிக்க முடிவு
...ததது.
...தன்படி இந்த டி.வி. நிறுவ
...தை சேர்ந்த நிருபர்கள் குழு
...ர் முக்கிய கட்சிகளைச்
...ந்த சில 'எம்.பி.'க்களை
...த்து தங்களை வட இந்திய
... தொழில் உற்பத்தியாளர்கள்
...த்தை சேர்ந்தவர்கள் என்று
...முகப்படுத்திக்கொண்டனர்.

தங்களுக்காக பாராளு... சில கேள்விகள் கேட்க வேண்டும் என்றும் அதற்கு எவ்வளவு எதிர் பார்க்கிறீர்கள் என்றும் கேட்ட... ...ருப்பவர்கள் நிருபர்கள் ...றியாத எம்.பி.க்கள் ...பதற்கு தங்களுக்கு ...தொகை வேண்டும் ...தரிவித்தனர். அந்த ... அவர்கள் கொடுக்க சம்மதித்தனர்.

... புவதற்... ...கள் கேட்ட

...களையும், அதைப்பற்றிய ...கேள்விப்பட்ட ...க்கும் லஞ்சம் வாங்கிய எம்.பி.க்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது.

பின்னர் லஞ்சம் வாங்கிய எம்.பி.க்கள் மொத்தம் 11 பேர் என்றும், அவர்களில் 6 பேர் பாரதியஜனதாவையும், தலா ஒருவர் காங்கிரஸ் மற்றும் லல்லுபிரசாத்தின் ராஷ்டிரீய ஜ... தளம் கட்சியைச் சேர்ந்த... என்றும் ...ஜன் ...ள் ... 11 எம்.பி.க்களின் பெயர் விவரம்

1. எம்.கே. அ... ச... பட்டீல் (எராண்டால் தொகு... - மராட்டியம்)

2. ஒய்.ஜி. மகாஜன் (ஜல்கா... -மராட்டியம்)

3. பிரதீப் காந்தி (ரா... னந்த்கோ - சத்தீஷ்கார்)

4. சுரேஷ் சந்தல் (ஹமீர்பூ... இமாச்சலபிரதேசம்)

5. சந்திரபிரதாப்சிங் (சி... மராட்டியம்)

இவர்கள் 5 பேரும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த...கள்.

6. சத்ரபால்சிங் (ஓரிசாம... லம்). இவர் டெல்லி மேல்-ச... பாரதிய ஜனதா உறுப்பினர்...

(2-ம் பக்கம் பார்க்க...

படிப்பகம்

www.padippakam.com

## வெள்ள நிவாரணப் படுகொலைகள்:

# கொலைக் குற்றவாளிகளைத் தண்டிக்கப் போராடுவதே உண்மையான அஞ்சலி

துயரத்தை துடைப்பதற்கான நிவாரணமே துயரத்தை உருவாக்க முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறது, ஜெயலலிதா அரசு. டிசம்பர் 18-ஆம் தேதியன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 42 உயிர்களைக் காவு வாங்கியுள்ள சம்பவம் ஒரு விபத்தல்ல. படுகொலை!

வதந்தி, விஷமிகள் பரப்பிய புரளி, நெரிசல், மக்களின் பணத்தாசை, ஒழுங்கீனம், எதிர்பாராத விபத்து என்ற வார்த்தைகளால் மறைக்கப்படும் படுகொலை.

மறைக்கப்படும் இந்த உண்மையை வெளிக் கொணர்ந்தும் கொலைக்குற்றவாளிகளைத் தண்டிக்கவும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன.

**சென்னையில்,** 42 பேர் பலியான துயரச் செய்தியுடன் விடிந்த கறுப்பு ஞாயிறன்று காலையில் எம்.ஜி.ஆர். நகருக்கு விரைந்த ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்கள், பலியானோர் குடும்பங்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, உடனடியாக, ''இது விபத்து அல்ல; படுகொலை! கொலைக் குற்றவாளிகளைத் தண்டிப்போம்! கொலைகார போலீசையும் அதிகாரிகளையும் ஏவிவிட்ட ஜெயா அரசைத் தூக்கியெறிவோம்!'' எனும் முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகளை அப்பகுதியெங்கும் ஒட்டினர். அன்று மாலை 5 மணியளவில் எம்.ஜி.ஆர். நகர் 100 அடி சாலையில் முழக்கமிட்டபடியே ஊர்வலமாக வந்த தோழர்கள் பாசிச ஜெயாவின் கொடும்பாவியை எரித்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு இப்போராட்டம் மிகச்சரியானது என எதிரொலித்தனர். பின்னர் தோழர்கள், கொலைகார ஆட்சிக்கு எதிராக முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்று, பலியானோர் வீடுகளின் முன்பாகத் திரண்டு அஞ்சலி செலுத்தினர். இந்த ஊர்வலத்தில் எம்.ஜி.ஆர். நகர் மக்கள் பலர் உணர்வோடு கலந்து கொண்டனர்.

பெரும்படையாக போலீசாரும் அதிரடிப்படைகளும் எம்.ஜி.ஆர். நகரில் ஞாயிறன்று குவிக்கப்பட்டிருந்த போதிலும், கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தின் போதும் ஊர்வலத்தின் போதும் போலீசார் இவற்றைத் தடுக்க முடியாமல் கண்காணித்தபடியே நின்றனர். இப்போராட்டத்தைத் தடுத்தாலோ, தாக்கினாலோ ஏற்கெனவே ஆத்திரத்தில் இருக்கும் மக்கள் தம்மைத் தாக்கி அழித்து விடுவார்கள் என்ற போலீசாரின் அச்சமே இதற்குக் காரணம். எனவேதான், போராட்டத்தின்போது அமைதி காத்த போலீசு, போராட்டத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய முன்னணியாளர்களை தனித்தனியே நள்ளிரவில் கைது செய்து சிறையிலடைத்தது.

பின்னர் 22.12.05 அன்று மாலை எம்.ஜி.ஆர். நகரில் புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் நினைவஞ்சலி ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலம், படுகொலை நடந்த மாநகராட்சி மைதானத்தை அடைந்ததும், அங்கு தோழர்கள் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். அங்கு நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு உரையாற்றினார். பின்னர் கருப்புக் கொடிகள் - பதாகைகளுடன் எம்.ஜி.ஆர். நகரின் தெருக்கள் வழியே ஊர்வலமாகச் சென்ற தோழர்கள், இறந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆறுதல் கூறினர். இந்த ஊர்வலத்தில் நிவாரணம் வாங்கச் சென்று பலியானோரின் உறவினர்களும் நண்பர்களும் தன்னெழுச்சியாகத் திரண்டு பங்கேற்றனர். ஊர்வலம் சென்ற பாதையெங்கும் உழைக்கும் மக்களும் வியாபாரிகளும் எழுந்து நின்று மரியாதை செலுத்தி தமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

**தஞ்சையில்,** ம.க.இ.க., பு.மா.இ.மு. சார்பில் கொலைகார போலீசையும் அதிகாரிகளையும் ஏவிவிட்டு 42 பேரின் உயிரைப் பறித்த பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் 19.12.05 அன்று ரயிலடியில் நடைபெற்றது. தமிழகத்தின் எதிர்க்கட்சியினரான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் அமைதி ஊர்வலம் நடத்த அன்று ரயிலடியில்

தொடர்ச்சி
27-ஆம் பக்கம்

சென்னை – எம்.ஜி.ஆர். நகரில் நடந்த
ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.




படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 3**

**ஜனவரி 2006**

*உள்நாடு*

**தனி இதழ்: ரூ. 5.00**

**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*

**(வான் அஞ்சலில்)**

**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# வெள்ள நிவாரணம்: "அரசியல் பண்ணுவது" தவறா?

சென்னை - எம்.ஜி.ஆர். நகரில் வெள்ள நிவாரணம் பெறப் போனவர்களில் 42 பேர் கொல்லப்பட்டு, அவர்களின் உற்றார்-உறவினர் கதறி எழும் ஓலத்தை விட ஓங்கி ஒலிப்பது, அந்தக் கொடுமையை தூர நின்று வேடிக்கை பார்த்து, "ச்சச்சு"க் கொட்டும் நடுத்தர, மேட்டுக்குடி அறிவாளிகளின் வேறு வகையான, வழக்கமான ஒப்பாரிதான்:

"ஐயோ, அரசியல் பண்ணாதீங்க!", "அரசியல்வாதிங்கதான் எல்லாத்துக்கும் காரணம்!", "அரசியல்வாதிங்க தலையீடு செஞ்சுதான் எல்லாத்தையும் கெடுக்கிறாங்க!", "இந்தத் துயரச் சம்பவத்திலும் அரசியல் ஆதாயம் தேட முயல்றானுங்க!", "அழுகைச் சத்தத்திலும் ஓட்டுத் தேடும் அரசியல்கள்."

எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சிகளும் குறிப்பாக கருணாநிதியும், ஜெயலலிதாவும் ஒருவர் மீது மற்றவர் குற்றச்சாட்டுகள் - எதிர்க் குற்றச்சாட்டுக்கள் வீசிக் கொள்வதைத்தான் இப்படிச் சொல்லி ஒப்பாரி வைக்கிறார்கள். முக்கியமாக இப்படிப்பட்ட வாதப் - பிரதிவாதங்களைச் செய்திகளாக்கிக் காசு பார்க்கும் செய்தி ஊடகம்தான், தங்களின் பெரும்பான்மை நேயர்கள் - வாசகர்களான நடுத்தர, மேட்டுக்குடியின் சார்பாக இத்தகைய ஒப்பாரி வைப்பதில் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றது. இதுவும் ஒரு வியாபாரத்துக்காகத்தான்!

உண்மையில் "அரசியல் பண்ணுவது" அரசியல் கட்சிகளின் முக்கியமான வேலைகளில் ஒன்று! அப்படிச் செய்யாமல் இருக்கும் அரசியல் கட்சி அரசியல் அரங்கில் நீடிக்கவே முடியாது, அழிந்து போகும்! அவை "அரசியல் பண்ணு"வதால்தான் மக்களுக்குக் கொஞ்ச நஞ்சமாவது அரசியல் தெரிகிறது. இதுவும் ஒருவகையான அரசியல் விழிப்புணர்வுதான். அதனால் தான், எங்கே தன் "குட்டு" அம்பலப்பட்டு போகுமோ, மக்களிடையே தம் செல்வாக்கு மங்கிப் போகுமோ என்று ஓரளவு அஞ்சி அஞ்சி, அரசியல் கட்சிகள் - குறிப்பாக, ஆளும் கட்சிகள் பயந்து நடக்கின்றன. கருணாநிதியோ, ஜெயலலிதாவோ யாராக இருந்தாலும் அவர்களின் செயல்பாடுகள், இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், குற்றங்குறைகள் ஆகியவை மக்களிடையே வைத்து அலசப்படும்போதுதான் ஓரளவாவது உண்மைகள் தெரியவருகின்றன.

"அரசியல் பண்ணப்"படுவதால்தான் சுனாமி நிவாரணத்தில் நடந்த ஊழல்கள், வெள்ள நிவாரணம் வழங்குவதில் நடந்த படுகொலைகள் போன்றவற்றுக்கு எந்த அளவு யார், யாருக்குப் பொறுப்பு இருக்கிறது என்பது தெரிய வருகிறது. இல்லையென்றால், இந்த உண்மைகள் எல்லாம் அடையாளம் தெரியாத பிணங்களாக வகைப்படுத்தி புதைக்கப்படும் அல்லது அதிகாரவர்க்க ஆவணக் குவியல்களுக்குள் புதைந்து போகும்.

இதுபோன்ற விவகாரங்கள் பொதுமக்கள் முன்பு வைத்து அலசப்படாமல் போவதால் அதிகபட்சம் ஆதாயம் அடையப்போவது போலீசும் அதிகாரவர்க்கமும் தான். ஏற்கெனவே, ஓட்டுக்கட்சிகளைப் போல மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஏதுமில்லாத இவர்கள் மேலும் கொழுத்துத் திரிவார்கள். உங்களுக்குப் பதில் சொல்லத் தேவையில்லை என்று ஏற்கெனவே திமிராகப் பேசித்திரிகிறார்கள்.

கொஞ்சங்கூட அரசியல் அறிவும் ஈடுபாடும் இல்லாமல், தானுண்டு, தன் வேலை, தன் மனைவி-மக்கள் உண்டு என்று பிழைப்புவாதத்தில் மக்கள் இருப்பதும், பொறுக்கித் தின்னுவதே அரசியல் என்றும் போராட்ட உணர்வு எதுவும் இல்லாது தலைவர்களின் காலில் விழுந்து கும்பிடுவதும் என்று தொண்டர்கள் இருப்பதும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற பாசிஸ்டுகளுக்கு வசதியாக இருக்கிறது.

பேருந்துக் கட்டண உயர்வு உட்பட ஒரே சமயத்தில் திடீரென்று 4000 கோடி ரூபாய் சுமையைத் தமிழக மக்கள் மீது மூன்றாண்டுகளுக்கு முன்பு ஏற்றி வைத்து அப்படியே அமுக்கினார், ஜெயலலிதா. இது வெறும் பொருளாதார சீரமைப்பு, கசப்பு மருந்து, இதை அரசியல் படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். ஆனால், இது கருணாநிதி ஆட்சியின் சீர்கேட்டால், கருவூலம் காலியாக்கப்பட்டதன் விளைவு என்று தானே "அரசியல்" பண்ணினார். அன்று ஜெயலலிதாவுக்கு எதிராக

தொடர்ச்சி 10-ஆம் பக்கம்

www.padippakam.com

## நாடாளுமன்றம் விற்பனைக்கு! மலிவு விலையில் எம்.பி.க்கள் தயார்!

# இந்திய நாடாளுமன்றம் ஊழலின் ஊற்றுக்கண்

இந்தியாவில் உள்ள பலகட்சி நாடாளுமன்ற ஜனநாயகம்தான் உலகிலேயே மிகச் சிறந்த அரசியலமைப்பு என்று முதலாளிய - ஏகாதிபத்திய அறிவுஜீவிகள் புகழ்ந்து தள்ளுகின்றனர். குறிப்பாக, சோவியத் ஒன்றியம் மற்றும் பிற போலி கம்யூனிச நாடுகளில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு, அங்கிருந்தெல்லாம் அரசியல் நிபுணர்கள் வந்து இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் செயல்படுவதை நேரில் கண்டு வியந்து போனார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசியல் அமைப்புதான் கம்யூனிச ஆட்சிகளின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று கண்டுபிடித்த ''நம்ம ஊரு'' த.தே.பொ.க. மணியரசன் கும்பல் உட்பட எல்லா வண்ணப் போலி கம்யூனிஸ்டுகளும் கூட பலகட்சி நாடாளுமன்ற ஜனநாயக அரசியலமைப்பே தமது திட்டமென்று மாற்றிக் கொண்டார்கள்.

இந்த அரசியலமைப்பு இவ்வளவு காலம் நீடித்திருப்பது, பல தேர்தல்கள் நடந்து முடிந்திருப்பதே இதன் வெற்றியைப் பறைசாற்றுவதாக அவர்கள் எல்லோரும் போற்றிப் புகழ்கிறார்கள். ஆனால், இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தினுடைய வெற்றியின் இரகசியம் என்னவென்று அவர்கள் பேசுவதில்லை. அது இதுதான்:

இந்தியாவின் பலகட்சி நாடாளுமன்ற ஜனநாயகம் செத்து அழுகிப் போன பிணமாகக் குப்பைமேட்டில் திறந்தவெளியில் கிடக்கிறது. அதன் முடைநாற்றம் மனிதர்களுக்குத் தெரிகிறது. ஆனால், செத்து அழுகிப் போன பிணத்தைக் கொத்தித் தின்னும் கழுகு-காக்கைகளுக்கு அது ருசியான விருந்தாகவே தெரிகிறது. அந்த விருந்தில் கலந்து கொள்ளும் காக்கைகள் போல, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்கும், பதவி வகிக்கும் கட்சிகள் அனைத்துமே ஏதாவது ஒரு வகையில் பொறுக்கித் தின்பதற்கு வசதிகளும் வழிவகைகளும் உள்ளன.

ஆளுங்கட்சிகளாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியுற்றாலும் சரி, எல்லாக் கட்சிகளுக்கும் பொறுக்கித் தின்பதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன என்கிற ஒரு காரணமே போதும். இதனாலேயே பலகட்சி நாடாளுமன்றம், மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற தோற்றத்தோடு நீடித்திருக்க முடிகிறது. இதுதான் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சிறப்பு.

இது இப்படித்தான் செயல்படுகிறது என்பது மீண்டும் மீண்டும் நிரூபணமாகிறது. சமீபத்தில் வெளியாகி நாடே நாறும் வோல்கர் கமிசன் அறிக்கை விவகாரம், நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கு அதன் உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்கிய விவகாரம், எம்.பி.க்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இலஞ்சம் வாங்கிய விவகாரம் - இவை அனைத்திலும் ஏதோ சில நபர்கள், ஏதோ ஒரு கட்சி மட்டும் சிக்கவில்லை. ஏறக்குறைய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் சிக்கியுள்ளனர்.

### வோல்கர் கமிசன் அறிக்கை பின்னணி

1990-களின் ஆரம்பத்தில் குவைத்தை ஆக்கிரமித்த ஈராக்கின் சதாம் உசேன் படைகள், அந்நாட்டு எண்ணெய் வயல்களைக் கைப்பற்றிக் கொண்டன. குவைத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பது என்ற பெயரில் அதிநவீன ஆயுதங்களுடன் மத்திய கிழக்கில் வந்திறங்கிய அமெரிக்கப் படைகள் வெறித்தனமான தாக்குதல் போர் நடத்தி ஈராக் இராணுவத்தை விரட்டியடித்தது. ஆனால், அமெரிக்கா அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. வளமிக்க எண்ணெய் வயல்கள் நிறைந்த மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தையும் தனது மேலாதிக்கம் மற்றும் மறுகாலனியாதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியது. ''உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் உட்பட பெருந்திரள் பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்து குவித்து வைத்திருப்பதோடு, அணுஆயுத உற்பத்திக்கான தயாரிப்பிலும் இறங்கியுள்ள சதாமின் ஈராக்கினால் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் பாதுகாப்புக்குப் பேராபத்து விளைந்துள்ளது; பல ஆயிரம் ஷியா மற்றும்



சர்ச்சில் அலமாவோ, காங்., மக்களவை | சத்ரபால் சிங், பா.ஜ.க., மாநிலங்களவை | சந்த்ரா பி. சிங், பா.ஜ.க., மக்களவை | ஃபகன் எஸ். குலஸ்தே, பா.ஜ.க., மக்களவை | பரஸ்நாத் யாதவ், எஸ்.பி., மக்களவை | ராம் எஸ். கோலி, பா.ஜ.க., மக்களவை | சாக்ஷி மகாராஜ், எஸ்.பி., மாநிலங்களவை

தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடமைய அரசால் கொடுக்கப்படும் எம்.பி.க்கள் நிதியைத் தேவைப்படும் இடங்களுக்கு வழங்க இலஞ்சம் கேட்டு மாட்டிக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்.


படிப்பகம்

குர்து மக்களைப் படுகொலை செய்து மனித உரிமைகளை மீறும் குற்றங்கள் செய்துள்ளது, சதாம் உசைன் அரசு'' என்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஈராக்குக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் பொருளாதாரத் தடை விதிக்கச் செய்தது, அமெரிக்கா. அதோடு இராணுவ முற்றுகையும் செய்தது.

ஈராக்குக்கு எதிரான இந்த இராணுவ முற்றுகை மற்றும் பொருளாதாரத் தடையால் உலக அரங்கில் அந்நாடு பெருமளவு தனிமைப்படுத்தப்பட்டது. இவற்றால், எண்ணெய் வளமிக்கதாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தி உலகச் சந்தையில் இருந்து மருந்து மற்றும் உணவு போன்ற இன்றியமையாத் தேவைகளைக் கூட வாங்க முடியாமல் ஈராக் திணறியது. இலட்சக்கணக்கான குழந்தைகள் போதிய மருந்துப் பொருட்கள் கூடக் கிடைக்காமல் மாண்டு போயின.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் நிபந்தனைகளை ஏற்று, ஈராக்கிலுள்ள இராணுவ-ஆயுத நிலைகளை ஐ.நா. பிரதிநிதிகள் சோதனையிட ஈராக்கின் சதாம் அரசு சம்மதித்தது. அதை ஏற்ற ஐ.நா. சபை, ஈராக்கில் மக்கள்திரள் பேரழிவு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதற்கான வசதிகள் இருக்கின்றனவா, அவை ஏற்கெனவே குவிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை சோதனை செய்வதற்கு தனது குழுவை அனுப்பும் அதேசமயம், ''உணவுக்கு எண்ணெய்'' என்ற இடைக்காலத் திட்டத்தை வகுத்து, அதன் அடிப்படையில் குறிப்பிட்ட அளவு பெட்ரோலிய எண்ணெய் விற்கவும் இன்றியமையாப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளவும் ஈராக்கை அனுமதித்தது.

ஆனால் அமெரிக்காவோ, தொடர்ந்து சதாம் அரசு மீது பல பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தி வந்தது. இறுதியில் மக்கள் திரள் பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்திருப்பதாகவும், அவை தயாரிப்பதற்கான இரகசிய ஆலைகள் வைத்திருப்பதாகவும், ஐ.நா. சோதனைக் குழு சுதந்திரமாக ஆய்வு நடத்துவதற்கு அனுமதி அளிக்க வில்லை என்றும், அணுஆயுதங்களைக் கூட உற்பத்தி செய்வதற்கு முயல்வதாகவும், அமெரிக்கா மீதான 2002 செப்டம்பர் 11 விமானத் தாக்குதல் நடத்திய பின்லேடனின் அல் கொய்தா அமைப்புடன் அச்சதியில் ஈராக்கு பங்கு இருப்பதாகவும் பல பொய்யான பழிகள் சுமத்தி 2004-இல் ஈராக்கைத் தாக்கி ஆக்கிரமித்துக் கொண்டது. சதாம் உசைன் மற்றும் அவரது சகபாடிகள் கைது செய்யப்பட்டு தண்டிப்பதற்கான விசாரணை நாடகமும் நடத்தி வருகிறது.

ஈராக் மீது அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து, அந்நாட்டு ஆட்சியைக் கவிழ்த்து, ஒரு பொம்மை ஆட்சியை நிறுவியதற்கு சொல்லப்பட்டக் காரணங்கள் அனைத்தும் பொய்யானவை என்று கடந்த ஓராண்டில் மேலும் அம்பலமாகிப் போனது. அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலக நாடுகளின் மக்கள் அனைவரும் இந்த ஆக்கிரமிப்புப் போருக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், ஈராக்கில் இலஞ்ச - ஊழல், சகநாட்டவர் மீதான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் நிறைந்த சதாம் உசைனின் ஆட்சியைத் தூக்கியெறிந்து 'சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே போர் தொடுத்தோம்' என்று கூறும் அமெரிக்கா, இந்தக் கோணத்தில் விசாரணை - தண்டனைக்கு ஆதாரங்களைத் தேடுகிறது.




**நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்குவதை அம்பலப்படுத்தி, ''கோப்ரா போஸ்ட்.காம்'' என்ற இணையதள பத்திரிகை மற்றும் ''ஆஜ்தக்'' செய்தி அலைவரிசையும் சேர்ந்து வெளியிட்டுள்ள ''வீடியோ'' புகைப்பட ஆதாரங்கள்.**

ஈராக்கிற்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்தவும், சதாம் ஆட்சியைக் கவிழ்த்து, நிறுவப்பட்ட பொம்மை அரசுக்கு நியாயவுரிமையைக் கோரவும் சதாமுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆதாரப்படுத்தும் வேலைகளில் அமெரிக்கா இறங்கியது. பேரழிவு ஆயுதக் குவிப்பு, அல் கொய்தா பயங்கரவாதிகளின் கூட்டாளி போன்ற குற்றச்சாட்டுக்கள் பொய்த்துப் போனபிறகு, சதாமுக்கு எதிரான உள்விவகாரங்களுக்குக் கூடுதல் முக்கியத்துவமளித்தது. அதாவது 'மனிதாபிமான' அடிப்படையில் ஐ.நா. சபை அளித்த ''உணவுக்கு எண்ணெய்'' திட்டத்தைக் கூட சதாம் உசைன் கும்பல் சொந்த ஆதாயத்துக்காக முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடித்திருக்கிறது என்று நிரூபிக்கும் வேலையில் ஈடுபட்டது, அமெரிக்கா.

உணவுக்கு எண்ணெய் திட்டத்தில் நடந்த இலஞ்ச-ஊழல் முறைகேடுகளை விசாரிப்பது என்று ஐ.நா. சபை மூலம் தீர்மானித்து வோல்கர் உட்பட ஏகாதிபத்தியக் கைக்கூலிகளைக் கொண்ட விசாரணைக் கமிசன் ஒன்று அமைக்கப்பட்டது. அதன் நோக்கம், சதாம் மீதான இலஞ்ச - ஊழல் முறைகேடுகளைத் திரட்டித் தருவதுதான். இதற்காக ஐ.நா. சபையைப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்கா, சதாம் மீதான சகநாட்டவர் படுகொலை, மனித உரிமை மீறல்கள் ஆகிய குற்றச்சாட்டுக்களை ஆதாரப்படுத்த, ஷியா, குர்து பிரிவின் பிரதிநிதிகள் என்ற பெயரில் வேறு சிலரைக் கொண்ட முகாம்களைப் பயன்படுத்திக் கொள்கிறது.

ஈராக்கை ஆண்ட சதாம் உசைன் கும்பல் இலஞ்ச - ஊழல், சகநாட்டவர் மீதான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகிய குற்றங்கள் புரியாத சுத்தமான ஜனநாயகத் தன்மை உடையது அல்ல என்பது உண்மைதான். இராணுவ பாசிச ஆட்சி நடத்தியதோடு, குவைத், ஈரான் ஆகிய நாடுகளுக்கு எதிராக ஆக்கிரமிப்புப் போர் நடத்திய கும்பல்தான். இந்தக் குற்றங்களை மூடி மறைப்பதற்காக இசுலாமிய மதவாதம்,

தேசியம், சுதந்திரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடிகளைத் தரித்துக் கொண்டதுதான்.

ஆனால், இந்தக் குற்றங்களுக்காக சதாம் கும்பலை விசாரிக்கவோ, தண்டிக்கவோ சிறிதும் அருகதையற்றது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஏனென்றால், ஒருபுறம் பேரழிவு ஆயுதங்களை மலைமலையாக அமெரிக்காவே குவித்து வைத்திருப்பதோடு, இலஞ்ச ஊழல், மனித உரிமை மீறல்களின் - ஜனநாயக விரோத நடவடிக்கைகளின் ஊற்றுமூலமாக அது விளங்குகிறது. மறுபுறம், ஈரானுக்கு எதிரான போரில் சதாமின் ஈராக்குக்குப் பேரழிவு ஆயுதங்களை வழங்கியதோடு, ஷியா, குர்து மக்களுக்கு எதிரான படுகொலைகளுக்கு ஆதரவு அளித்தும் வந்திருக்கிறது.

**எரிகிற வீட்டிலும்**
**கொள்ளையடிக்கும் எமகாதகர்கள்**

கடந்த நவம்பரில் அந்த வோல்கர் கமிசன் அறிக்கை வெளியானது. உணவுக்கு எண்ணெய் திட்டத்தின் மூலம் ஒப்பந்ததாரர்கள் அல்லாத, உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 270 பேருக்கு சதாமின் ஆட்சி எண்ணெய் ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறது. அவர்களிடமிருந்து சேவைக் கட்டணம் வசூலித்து சதாமின் ''பாத் கட்சி'' ஆதாயம் அடைந்திருக்கிறது என்று கூறுகிறது வோல்கர் கமிசன். அப்படி ஒப்பந்ததாரர் அல்லாத - ஈராக் எண்ணெய் ஒதுக்கீடு செய்து ஆதாயம் அடைந்தவர்களின் வரிசையில் இந்தியாவின் மிகப் பெரிய தரகு முதலாளியும் இன்றைய ஆளும் காங்கிரசுக்கு நெருக்கமானதுமான அம்பானி குடும்பத்தின் ரிலையன்சு, காசுமீரின் பாந்தர் கட்சித் தலைவர் பீம்சிங், காங்கிரசு கட்சியின் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் காங்கிரசுக் கட்சியும் இடம் பெற்றுள்ளனர்.

2001-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காங்கிரசுக் கட்சியின் தூதுக்குழுவுக்குத் தலைமையேற்று ஈராக்குக்குப் போன நட்வர்சிங் கூடவே தனது மகன் ஜகத்சிங் மற்றும் அவரது உறவினரும் தொழில் கூட்டாளியுமான அந்துலீப் சேகலை அழைத்துக் கொண்டு போய், அவர்கள் மூலம் 40 இலட்சம் பீப்பாய் பெட்ரோலிய எண்ணெய் ஒதுக்கீடு பெற்று, சேகலின் ''ஹம்தான் ஏற்றுமதி'' என்ற கம்பெனி பெயரில் சதாம் உசைனின் ''பாத்'' கட்சிக்கு ஜோர்டான் நாட்டு வங்கி மூலம் சேவைக் கட்டணம் செலுத்தியுள்ளனர். காங்கிரசுப் பிரமுகராக இருந்து, அக்கட்சித் தூதுக்குழுவில் சென்ற அனில் மதராணி இதை உறுதி செய்துள்ளார்.

இச்செய்தி வெளியானவுடன், தனக்கு எதிரான அரசியல் சதி, ஆதாரமற்றது என்று மறுத்த நட்வர் சிங்கும் அவரது மகனும் ஈராக் பயணம் குறித்து முன்னுக்குப் பின் முரணாக உளறினர். நட்வர் சிங்குக்கு ஆதரவாகப் பேசிய காங்கிரசு, ஒருபுறம் மத்திய அமலாக்கப் பிரிவு மூலம் விசாரணை நடத்திக் கொண்டே, உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி பதக் தலைமையில் விசாரணைக் கமிசன் போட்டு பிரச்சினையை மழுப்புவதில் இறங்கியது.

நட்வர்சிங்கைப் பதவி நீக்கம் செய்யும்படி நாடாளுமன்றத்தில் ''கலகம்'' செய்தன எதிர்க்கட்சிகள். முதலில் நட்வர்சிங் மீது நடவடிக்கையை வலியுறுத்திய போலி கம்யூனிஸ்டுகள் பிறகு, எல்லாம் சி.ஐ.ஏ. சதி என்றும், நட்வர் சிங் இடதுசாரி - முற்போக்காளர், அமெரிக்க எதிர்ப்பாளர், வோல்கர் கமிட்டியே அமெரிக்க - சி.ஐ.ஏ. புனைவு என்ற நிலையெடுத்துள்ளது. நட்வர் சிங்கை நீக்கிவிட்டு தனக்கு விசுவாசியான மன்மோகன் சிங்கிடம் அயலுறவுத் துறையை ஒப்படைக்கவே அமெரிக்கா இப்படிச் செய்கிறது என்கின்றனர். இப்படிக் கூறுபவர்கள்தாம் தொடர்ந்து மன்மோகன் சிங் அரசையும் ஆதரிகின்றனர். மறுபுறம் நட்வர் சிங்கும் சி.பி.எம். கூறுவதுபோல, அமெரிக்க எதிர்ப்பாளர் அல்ல. பதவியேற்ற மறுவாரமே அமெரிக்காவிற்குப் போய் புஷ்ஷிடம் மண்டியிட்டு, ஈராக்கிற்கு இந்தியப் படை அனுப்புவதை உறுதி கூறியவர்; இங்கே ஏற்பட்ட கடும் எதிர்ப்பே, அவ்வாறு செய்ய விடாமல் தடுத்து விட்டது.

ஈராக் விவகாரத்தில் தன்னை ஆதரிக்காத, சதாம் ஆதரவு நட்வர் சிங்கையும், காங்கிரசையும் பழிவாங்கவே வோல்கர் கமிட்டி அறிக்கையை அமெரிக்கா தயாரித்துள்ளது என்றும் போலி கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். ஆனால் நட்வர் - மன்மோகன் - சோனியா கும்பல்தான் அமெரிக்காவுடன் அணுஆயுத - இராணுவ ஒப்பந்தம் போட்டது, ஈரானுக்கு எதிரான அமெரிக்க சதியை ஆதரித்து, அணு ஆயுத தடை தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு மற்றும் ஆதாரங்கள் வெளிவந்தது காரணமாக, காங்கிரசு ஊழலை மறைப்பதற்காக நட்வர் சிங்கிடம் இருந்த பதவி பறிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ''நீ மட்டும் யோக்கியமா?'' என்ற வழக்கமான பாணியில், ஈராக் உணவு எண்ணெய் திட்டத்தால் காங்கிரசு மட்டும் ஆதாயமடையவில்லை, பா.ஜ.க.வும்தான் ஊழல் செய்திருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை காங்கிரசு வெளியே கொண்டு வருகிறது.

பா.ஜ.க. ஆட்சியில்தான் இந்த ஊழல் நடந்திருக்கிறது. ஈராக்கில் உள்ள இந்தியத் தூதர் அப்போதே இது குறித்த செய்தியை, பா.ஜ.க. அரசுக்கு அனுப்பியும் நடவடிக்கை எடுக்கவில்லை. தேர்தல் சமயத்தில் பா,ஜ.க. அரசுக்கு இந்த உண்மை தெரிய வந்தும் தனக்குச் சாதகமாக, காங்கிரசுக்கு எதிரான ஆயுதமாக அது பயன்படுத்தாதற்கு காரணம் இந்த ஊழலில் பா.ஜ.க.வுக்கும் பங்கு கிடைத்திருப்பதுதான் என்று எதிர் குற்றச்சாட்டு வீசப்படுகிறது. குறிப்பாக, வாஜ்பாயியின் மருமகன் ரஞ்சன் பட்டாச்சார்யா, சதாமின் மகனுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார்; அவருக்கு எண்ணெய் விவகாரத்தில் தொடர்பு இருந்தது என்று ராஜீவுக்கும் காங்கிர

வோல்கர் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங்; முன்னாள் காங்கிரசு தலைவர் ஜமில் செய்தி; மற்றும் நட்வர் சிங்கின் உறவினர் அந்துலீப் சேகல்.







படிப்பகம்

சுக்கும் நெருங்கிய கூட்டாளியும், காங்கிரசு அரசின் முன்னாள் வெளியுறவுச் செயலரும், உ.பி. மாநில முன்னாள் ஆளுநருமான ரமேஷ் பண்டாரி கூறுகிறார்.

எப்படியோ அமெரிக்கா, தனது எதிரிக்கு எதிராக நடத்திய துப்பாக்கிச் சூட்டின் சிதறல்கள் தனது விசுவாசிகளான இந்திய முன்னாள்-இன்னாள் ஆட்சியாளர்களையும் பதம்பார்த்து விட்டது. இந்தநாட்டில் ஜனநாயகம் பரவலாக்கப்படுகிறது என்று சொன்னால், ஊழல் பரவலாக்கப்படுகிறது; ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல, எதிர்க் கட்சிகளுக்கும் கூட இலஞ்ச ஊழல்களுக்கான வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. சந்தேகமின்றி இந்த வகையில் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் மிகச் சிறந்து விளங்குகின்றது.

**ஆளுங்கட்சிகளாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியுற்றாலும் சரி, எல்லாக் கட்சிகளுக்கும் பொறுக்கித் தின்பதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதுதான் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சிறப்பு.**

### கேள்வி கேட்க இலஞ்சம்! சர்வகட்சி ஜனநாயகம்!

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அனைத்துக் கட்சி இலஞ்ச - ஊழல் மாண்பை நிரூபிக்கும் வகையில் மேலும் சில சான்றுகள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. தொழில் குழுமங்களுக்குச் சாதகமாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்புவதற்கு எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்கும் ''வீடியோ'' காட்சிகள்; உள்ளூர் தொகுதி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் 2 கோடி ரூபாய் பெறும் எம்.பி.க்கள், திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு இலஞ்சம் கேட்கும் ''வீடியோ'' காட்சிகள் சமீபத்தில் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்டிருக்கின்றன.

முந்தைய பா.ஜ.க. - ஜனதா தள கூட்டணி ஆட்சியின் போது ஆயுத பேர நாடகமாடி அக்கட்சிகளின் தலைவர்கள் இலஞ்சம் வாங்கக் கூடியவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையிலான ''வீடியோ'' காட்சியைப் படமாக்கி ஒளிபரப்பினார், ''தெகல்கா'' செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் அனிருத் பெகல். இப்போது அவர் ''கோப்ரா போஸ்ட்'' என்ற செய்தி இணையத்தளத்தின் சொந்தக்காரரும் ஆசிரியருமாக உள்ளார். இவர் ''ஆஜ் தக்'' என்ற செய்தி அலைவரிசையுடன் இணைந்து, நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்குவதை ஆதாரப்பூர்வமாக நிரூபித்துள்ளார்.

''கோப்ரா போஸ்ட்'' இணையத்தளம் மற்றும் ''ஆஜ் தக்'' அலைவரிசையைச் சேர்ந்த செய்தியாளர்களைக் கொண்ட குழு ஒன்று, சிறுதொழில் முனைவோர் சங்கம் என்ற பெயரில் எம்.பி.க்கள் சிலரை அணுகி, சங்கத்துக்குச் சாதகமாக நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கான பேரங்கள் நடத்தி பதினைந்தாயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை இலஞ்சம் கொடுத்து, அதை இரகசியமாக ''வீடியோ'' காட்சியாகப் பதிவும் செய்து ஒளி பரப்பிவிட்டது.

இதைப் பார்த்து ''நாங்கள் ஆழமான வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துவிட்டோம்'' என்று தற்போதைய நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி பம்மாத்து பண்ணியிருக்கிறார். ஆனால், இலஞ்சம் வாங்கிக் கொண்டு நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்பது பல ஆண்டுகளாக நடப்பது எம்.பி.க்கள் உட்பட அரசியல்வாதிகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் தெரிந்த விசயம் தான்!

''1980-கள் நெடுகவும் பெட்ரோலிய - இரசாயனம் மற்றும் மருந்துக் கம்பெனிகள் எம்.பி.க்களைப் பயன்படுத்தி கேள்விகளும் எதிர்க் கேள்விகளும் நாடாளுமன்றத்தில் எழுப்பிக் கொண்டிருந்தது நன்றாகவே தெரியும். இந்தப் பிரச்சினை இந்தியாவில் ஒன்றும் விதிவிலக்கானதில்லை'' என்கிறார் ராஜீவ்-சோனியா இருவருக்குமே நெருங்கிய காங்கிரசு மூத்த தலைவரும் மேலவை எம்.பி.யுமான ஜெயராம் ரமேஷ்.

''இப்போது சிக்கியவர்கள் எல்லாம் சிறிய மீன்கள்தான்; மாபெரும் சுறாக்களையெல்லாம் யாரும் நெருங்கக் கூட இல்லை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. கேள்வி கேட்கப் பணம் வாங்கிய விவகாரம் என்பது வெளியே தெரியும் ஒரு சிறுமுனை போன்றது தான். மலையளவு விவகாரங்கள் மறைந்து கிடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட தொகையை 'படி' போலப் பெற்றுக் கொண்டு, தொழில் குழுமங்கள் சார்பில் நிரந்தரப் பிரதிநிதிகளாக இருக்கும் எம்.பி.க்கள் பலரும், சில குறிப்பிட்ட ஆதரவுக் குழுக்களில் இடம் பெற்றுள்ள எம்.பி.க்கள் பலரும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்கள் யார் யார் என்பது அரசியல் வட்டாரத்திலோ, நாடாளுமன்ற வட்டாரத்திலோ தெரியாத விசயமுமல்ல.

''தொழில் குழுமங்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எம்.பி.க்களுக்கு ரொக்கம் மட்டுமல்லாமல், இதர சலுகைகள், போனஸ், நிறுவனப் பங்குகள் (ஷேர்கள்) உள்பட பல ஆதாயங்கள் கிடைக்கின்றன. அவர்கள் சார்ந்துள்ள தொழில் குழுமங்கள் அல்லது அமைப்புக்கு லாபத்தை ஏற்படுத்தக் கூடிய கேள்விகளையே அந்த எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் கேட்கின்றனர். ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் தொழில் நிறுவனக் குழுமங்கள், தம் எதிரி நிறுவனங்களை முடக்குவதற்கான கேள்விகளை நாடாளுமன்றத்தில் கேட்பதற்கு அரசியல்வாதிகளைக் கடந்த காலத்தில் பயன்படுத்தி வந்தன'' *(தினமணி 19.12.05)* என்று எழுதுகிறார், மூத்த செய்திக் கட்டுரையாளர் *நீரஜா சௌத்ரி.*

மக்கள் பிரதிநிதிகள் என்ற போர்வையில் பெரும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளாகச் செயல்படுவது பழைய, ஒப்பீட்டு ரீதியில் சிறிய விசயம்தான். நாடாளுமன்றம் மற்றும் அரசாங்கத்துக்குக் கொள்கை முடிவுகளைப் பரிந்துரைக்கும் நாடாளுமன்ற குழுக்களின் உறுப்பினர்களாகவே தங்கள் பிரதிநிதிகளை தொழில் நிறுவனங்கள் நியமிக்கச் செய்கின்றன. இதற்கும் மேலேபோய், தரகு அதிகார முதலாளிகளே நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவிகளையே அரசியல் கட்சிகளிடம் பேரம்பேசி வாங்கி விடுகின்றனர். பா.ஜ.க. மற்றும் காங்கிரசைப் போலவே, மாயாவதி, முலயம் சிங் கட்சிகள் முக்கியமாக இதைச் செய்கின்றன.

ஒழுக்க சீலர்களின் கட்சி என்று நாடகமாடும் பா.ஜ.க.வினர் ஆறுபேரும், பிழைப்புவாத மாயாவதி கட்சியினர் மூவரும், லல்லு, முலயம், காங்கிரசு கட்சிகளில் தலா ஒருவருமாக 11 எம்.பி.க்கள் கேள்வி எழுப்ப லஞ்சம் வாங்குபவர்களின் ''வீடியோ'' காட்சியில் சிக்கியுள்ளனர். பா.ஜ.க. தமது கட்சிக்காரர்கள் மீது முதலில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும் நாடாளுமன்றத்தில் இருந்து அவர்களை நீக்குவதற்கு

மறைமுக எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். சாதி அரசியல் நடத்தும் மாயாவதி, லல்லு, முலயம் கட்சிகளுக்கு லஞ்ச - ஊழல் ஒரு பிரச்சினையே இல்லை. இதெல்லாம் தனது கட்சிக்கு எதிரான சதி என்று கூறும் மாயாவதி தனது ஊழல் எம்.பி.க்களுக்கு வக்காலத்து வாங்கி நியாயப்படுத்தியிருக்கிறார்.

இந்த இலஞ்ச நடவடிக்கை அம்பலமாக்கப்பட்ட அதேபாணியில் அடுத்ததாக, ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய் தொகுதி வளர்ச்சிக்கு என்று தரப்படும் நிதியை ஒதுக்கீடு - ஒப்புதல் கொடுப்பதற்காக, மூன்று பா.ஜ.க., இரண்டு முலயம் கட்சி, மாயாவதி, காங்கிரசு கட்சிகளில் தலா ஒருவர் என ஏழு எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்குவதை ''ஸ்டார்'' அலைவரிசை ''வீடியோ'' காட்சி எடுத்து அம்பலப்படுத்தியிருக்கிறது.

கேள்வி எழுப்ப லஞ்சம் பெற்ற விவகாரத்தில் பரபரப்பாகவும், உடனேயும் நடவடிக்கை எடுத்த கட்சிகளும், நாடாளுமன்றமும் இரண்டாவது விவகாரத்தில் அப்படிச் செய்யவில்லை. இவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு இடைக்கால தடைவிதித்து, அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி சம்பந்தப்பட்ட அமைச்சக விசாரணை என்பதாக திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் கொஞ்ச காலத்தில் ''நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இதெல்லாம் சகஜம்தான்'' என்று எல்லாக் கட்சிகளும் வெளிப்படையாகவே மாற்றி விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ''சிக்கிக் கொள்ளும் அளவுக்கு முட்டாள்தனமாக இருந்ததற்காக எம்.பி. பதவியைப் பறிப்பது என்பது மிகக் கடுமையான தண்டனை என்று அவர்கள் கூறுவார்கள்'' என்கிறார், நீரஜா சௌத்ரி. இப்படியே போனால், ஒழுங்கு நடவடிக்கையில் இருந்து யாருமே தப்ப முடியாது; ஆகவே இதையெல்லாம் கண்டுகொள்ளக் கூடாது என்று மாற்றி விடுவார்கள்.

''கம்யூனிஸ்டு கட்சிகள் மட்டும்தான் இதிலெல்லாம் சிக்காது ஒழுக்க சீலர்கள்'' என்று அறிவுஜீவிகளால் பாராட்டப்படுகிற இவர்கள், சிக்கிக் கொள்ளும் அளவுக்கு முட்டாள்கள் அல்ல என்பதுதான் உண்மை. 20,30 சினிமா படங்களை அருவெறுப்பாக எடுத்துக் கொள்ளையடிக்கிறார்கள் என்றால் அவற்றுக்கு நடுவே ஒரு அற்பத்தனமான, பத்தாம்பசலிக் குடும்பப் படத்தையும் எடுத்து காசு பார்ப்பது போன்றது போலி கம்யூனிச கட்சிகளின் செயல். ஏற்கெனவே பன்றித் தொழுமாகி விட்டது நாடாளுமன்ற ஜனநாயகம். அந்தப் பன்றிகள் மீது பன்னீர் தெளித்து மணம் பரப்புவதுதான் இவர்கள் வேலை.

'''நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதே கேலிக் கூத்து' என்று காலம் காலமாக தீவிர கம்யூனிஸ்டுகள் சொல்லி வருவது உண்மைதானோ என்று பொதுமக்கள் வீதிக்கு வீதி பேசும் நிலை ஏற்பட்டிருக்கிறது'' என்று எழுதுகிறது, பிரபல பார்ப்பன கிசுகிசு ஏடான ஜூனியர் விகடன். இதே அச்சம்தான் போலி கம்யூனிஸ்டுகளுக்கும்! ஆனாலும் இந்த உண்மையை என்ன செய்தும் மூடி மறைத்துவிட முடியாது!

**● ஆர்.கே.**

# தமிழ் மக்கள் இசைவிழா இவ்வாண்டு (2006) இரத்து செய்யப்படுவது குறித்த அறிவிப்பு!

**பெ**ருமழை - வெள்ளத்தால் துயரத்தில் தத்தளிக்கிறது தமிழகம். தமிழகத்தின் பெரும்பான்மையான மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் அழிந்து, விவசாயிகள் மீளாக் கடனில் மூழ்கியிருக்கிறார்கள். சென்னை நகரில் வெள்ளம் மக்களுடைய உடைமைகளைப் பறித்தது என்றால், ஜெ. அரசின் வெள்ள நிவாரணம் ஏழை மக்களின் உயிரைப் பறித்திருக்கிறது.

சென்ற ஆண்டு சுனாமி; இந்த ஆண்டு வெள்ளம். இயற்கையின் சீற்றத்துக்கு ஏழை மக்களைக் களப்பலியாகத் தள்ளிவிடுகின்றன ஆளும் வர்க்கங்கள். அவர்களுடைய அரசோ, தன்னுடைய 'கருணைப் பார்வை'யினால் மக்களைச் சுட்டெரிக்கிறது. சுனாமி நிவாரணத்தில் தொடங்கிய அரசின் இந்தக் கொலைப்பணி வெள்ள நிவாரணத்திலும் தொடர்கிறது.

சுனாமி நிவாரணப் பணிகள் மற்றும் மறுவாழ்வு கோரும் மாநாடுகளை நடத்தும் பொருட்டு 2005-ஆம் ஆண்டிற்கான தமிழ் மக்கள் இசைவிழாவை இரத்து செய்தோம். இந்த ஆண்டோ வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் போராட்டங்கள்! வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர், திருச்சி மாவட்டங்களிலும், சென்னை-மதுரவாயல் பகுதியிலும் டிசம்பர் 10-ஆம் தேதி வரை நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள் எமது தோழர்கள். நிவாரணத்திற்கான போராட்டத்தில் மக்களையும் அணிதிரட்டினார்கள். தமிழக அரசு நடத்திய நிவாரணப் படுகொலைகளைக் கண்டித்து தமிழகமெங்கும் ஜெ.யின் உருவப் பொம்மையை எரித்த எம் தோழர்கள் சிறையில் இருக்கிறார்கள்.

இந்தச் சூழல் இசைவிழாவை நடத்துவதற்கு உகந்ததாக இல்லை. தமிழ் மக்கள் இசை என்பதை, மக்கள் விடுதலைக்கான போர் முழக்கமாகத்தான் எழுப்பி வருகிறோம் எனினும், நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்தப் பணிகளும், மக்களைச் சூழ்ந்திருக்கும் துயரமும், அவலமும் இவ்வாண்டு இசைவிழாவையும் நடத்தவியலாத நிலையைத் தோற்றுவித்துள்ளன.

தண்ணீர் தனியார்மயம் - மறுகாலனியாக்கத்தை எதிர்த்து செப்.12-இல், நெல்லையில் தோழமை அமைப்புகளுடன் இணைந்து நாங்கள் நடத்திய அமெரிக்க கோக் எதிர்ப்புப் போராட்டமும், அதனைத் தொடர்ந்து அந்த வட்டாரத்தில் மேற்கொண்டு வரும் பணிகளும், மக்களின் எதிர்ப்புணர்வுக்கு வீரியம் அளித்துள்ளன. காவல்துறை கோக்கின் ஏவல்துறையாக வெளிப்படையாகவே களமிறங்கியிருக்கிறது. ''கோக்கை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது'' என எழுத்துப்பூர்வமாகவே உத்தரவிடுகிறது. காலனி ஆதிக்க காலத்தை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும் இந்த இழிநிலையை எதிர்க்க வேண்டிய கடமை அவசியமானதாக முன்வந்து நிற்கிறது.

தமிழ் மக்கள் இசைவிழாவை பல்லாயிரக்கணக்கான ஜனநாயக சக்திகள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் எமது ஆதரவாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், இவ்வாண்டும் விழா இரத்து செய்யப்படுவது அவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் என்பதையும் நாங்கள் அறிவோம். எனினும், நிலைமைகள் தோற்றுவித்துள்ள இந்த நிர்ப்பந்தத்தை அனைவரும் புரிந்து கொள்வீர்கள் என்றே நம்புகிறோம்.

இசைவிழாவிற்கு வழங்கும் ஆதரவை எமது போராட்டங்களுக்கு வழங்கக் கோருகிறோம்!

*இவண்*
*மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.*

# சிவப்பென்றால் சிலருக்கு பயம்! பயம்!!

“ஜெகந்நாபாத் சிறைச்சாலையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சி நடத்திய அடாவடித்தனமான, துடுக்குத்தனமான தாக்குதலானது, பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைக் குறைபாடுகள் குறித்த பல பாரிய கேள்விகளை எழுப்புகின்றது. தேர்தல் ஆணையத்தின் கட்டளையின்படி சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்துவதற்காக பாதுகாப்புப் படைகள் ஈடுபடுமாறு திருப்பி விட்டிருந்தது கூட, இந்தச் ‘சிறைத் தகர்ப்பு நடவடிக்கை'க்கு காரணமாக அமைந்து விட்டது. இந்த அமைப்பு அதிநவீன ஆயுதங்களை எவ்வாறு அடைய முடிந்தது; அவர்களின் தொழில்முறைப் பயிற்சி மற்றும் பிற தீவிரவாதக் குழுக்களுடனான தொடர்புகள் ஆகியவை குறித்துப் பாரிய கேள்விகளைக் கூட இந்த ஒட்டு மொத்த நிகழ்வு எழுப்புகிறது. இவற்றிலெல்லாம் அரசாங்கமும் அதன் (ஆயுதப் படைகள் மற்றும் உளவுத்துறை) முகமைகளும் கவனம் செலுத்த வேண்டும்; அதேசமயம் விவாதிக்கப்பட வேண்டிய பிற பிரச்சினைகளும் இருக்கின்றன.''

- இது அருண்செளரி, ''துக்ளக் சோ'' போன்ற கம்யூனிச எதிர்ப்பு பார்ப்பன பாசிசக் கடுங்கோட்பாட்டுவாதிகள் எழுதியதல்ல. ஏகாதிபத்திய மேலாதிக்கம், மறுகாலனியாதிக்கம், உலகமயமாக்கம் ஆகிய புதிய காலகட்டத்திற்கேற்ற நவீன திருத்தல்வாதத்தின் புதிய தலைமுறைத் தலைவர் சீதாராம் யெச்சூரியின் கூப்பாடு.

ஜெகந்நாபாத் சிறைத் தகர்ப்பு குறித்து எழுதும் முதலாளியத் தாராளவாத விமர்சகர்களே கூட, நக்சல்பாரி இயக்கத்தின் வளர்ச்சிக்கான சமூக, அரசியல், பொருளாதார காரணிகளைச் சுட்டுகின்றனர்; தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் பின்தங்கிய நிலை, அரசாங்கங்கள் அம்மக்களின் நல்வாழ்வில் அக்கறையின்றிப் புறக்கணிப்பது மட்டுமல்ல. அரசின் மக்கள் விரோதச் செயல்களையும் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், கம்யூனிஸ்ட் - மார்க்சிஸ்ட் என்று சொல்லிக் கொள்ளும் சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரியோ துரோகத்தனமான, கேவலமான எதிரிவர்க்கக் கைக்கூலியாகவே மாறி மேற்கண்டவாறு தமது அதிகாரபூர்வ ஆங்கில ஏடான ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''யில் எழுதியிருக்கிறார்.

அதாவது, இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சி நவீன ஆயுதங்களை அடைந்தது, தொழில்முறை பயிற்சி பெற்றது, பிற குழுக்களுடனான அதன் தொடர்புகள் ஆகியவற்றைக் கண்டறிந்து ஒடுக்கும் வேலைகளை அரசும் அதன் ஆயுத - உளவுப் படைகளும் செய்ய வேண்டும், தம் தரப்புக்கு அக்கட்சி எழுப்பியுள்ள அரசியல், சித்தாந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்வதாக எழுதுகிறார்.

நக்சல்பாரி இயக்கத்துக்கு எதிரான அரசியல் - சித்தாந்த விளக்கம் என்று எண்ணிக் கொண்டு வழக்கமான தனது புளுகுமூட்டையை அவிழ்த்து விட்டிருக்கிறார், அந்தத் திருத்தல்வாதி. சிறைத்தகர்ப்பு போன்ற வன்முறை ''இடது தீவிரவாதம்'' என்றும் அவற்றை வைத்து கம்யூனிசம் வன்முறையை வழிபடுவதாகத் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்படுவதாகவும், இம்மாதிரி அராஜகத்தையும் சி.பி.எம். கட்சியின் புரட்சிகர வேலைகளையும் ஆர்.எஸ்.எஸ். சமப்படுத்துவதாகவும் புளுகுகிறார். அராஜக வன்முறையை இசுலாமிய அடிப்படைவாதிகளோடு வேண்டுமென்றே சமப்படுத்தி வைப்பது போலத்தான் சி.பி.எம். கட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து ஆர்.எஸ்.எஸ். குழப்புவதாகப் புளுகுகிறார்.

நக்சல்பாரி இயக்கத்தின் புரட்சிகர வன்முறையை, சி.பி.எம்.-இன் நாடாளுமன்றப் பன்றி அரசியல் வேலைகளுக்குச் சமமாகப் பேசினால், நக்சல்பாரி இயக்கத்துக்குதான் இழப்பு, அவப்பெயர் அவமரியாதை; சி.பி.எம். கட்சிக்கு அல்ல. ஆனால் ஆர்.எஸ்.எஸ். மட்டுமல்ல, கொஞ்சமாவது பொது அரசியல் அறிவுள்ள எல்லோருக்குமே நக்சல்பாரி இயக்கத்துக்கும், சி.பி.எம். கட்சிக்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாடு தெரியும். அதாவது சி.பி.எம். ஒரு நாடாளுமன்றக் கட்சி, புரட்சிக்கு வன்முறையில் நம்பிக்கை வைக்காத கட்சி. நக்சல்பாரி இயக்கம் புரட்சிகர வன்முறையில் நம்பிக்கையுள்ள கட்சி, நாடாளுமன்ற அரசியலை எதிர்த்துப் புறக்கணிக்கும் இயக்கம். எப்படியிருந்தாலும் (புரட்சிகர) வன்முறை இரண்டு இயக்கங்களுக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு என்கிறபோது, ஆர்.எஸ்.எஸ். மட்டுமல்ல, வேறு யார்தான் இரண்டின் நடைமுறைகளைச் சமன்படுத்திப் பேசமுடியும்? அப்படிப் பேசினால் யார்தான் அதை நம்பப் போகிறார்கள்?

ஆக, திருத்தல்வாதி இங்கேயும் உண்மையைத் திரித்து எழுதியிருக்கிறார். ஏதோ, தனது கட்சியும் புரட்சிகரக் கட்சி என்பதாகக் காட்டிக் கொள்வதற்காக, அப்பட்டமான புளுகுவாதத்தை முன்வைத்து புரட்சிகர இயக்கத்தின் மீது அவதூறு செய்ய முயன்றிருக்கிறார். இவர்கள் அமைப்பைச் சேர்ந்த 42 தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் கீழ்வெண்மணியில் உயிரோடு கொளுத்தப்பட்ட போதும், கான்பூரில் இவர்களின் கலைக்குழு அமைப்பாளர் சப்தார் ஹாஸ்மி பட்டப்பகலில் - நடுத்தெருவில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்ட போதும், அதேபோல, இவர்களின் மதுரை மாநகர உறுப்பினர் லீலாவதி கொடூரமாகக் கொல்லப்பட்ட போதும் கோழைத்தனமாக செயலிழந்து ஒடுங்கிக் கிடந்துவிட்டு, அவற்றை ஓட்டுப்பொறுக்குவதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும் இந்தப் போலி கம்யூனிஸ்டுகளோடு, புரட்சிகர நக்சல்பாரி இயக்கத்தை சமன்படுத்திவிடுவார்கள் என்பது ஒரு சிகப்புப் பொய் அல்லவா?

அதோடு, ஜெகந்நாபாத் சிறைத்தகர்ப்பு ஒரு அடாவடித்தனமான, துடுக்குத்தனமான தாக்குதல் என்றும், வன்முறை வழிபாடு என்றும், அராஜக வன்முறை என்றும் யெச்சூரி சித்தரிக்கிறார். இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியினர் உட்பட நக்சல்பாரி இயக்கத்தினர் ஆயிரக்கணக்கில் இந்தியச்சிறையில் குற்றப்பத்திரிக்கை கூட தாக்கல் செய்யப்படாமல், விசாரணைக் கைதிகளாக பல ஆண்டுகளாக அடைபட்டுக் கிடக்கிறார்கள். பதின்வயதுச் சிறுவர்கள், பெண்கள் கூட ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக ஜெகந்நாபாத் கொடுஞ்சிறையில் மட்டும் 300-க்கும் மேற்பட்ட நக்சலைட்டுப் புரட்சியாளர்கள் விசாரணைக் கைதிகளாக ஆண்டுக்கணக்கில் அடைபட்டுக் கிடந்தார்கள். அதனால்தான் இந்தச் சிறைத் தகர்ப்பே தவிர,

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி...**



தமிழக அரசு சென்னையில் நடத்திய மகளிர் சுய உதவிக் குழு மாநாட்டில் சிறந்த மகளிர் சுய உதவிக் குழுவிற்குப் பரிசு வழங்கும் ஜெயா: உலக வங்கி உருவாக்கிய நுண்கடன் திட்டமான மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தமது திட்டம் போலக் காட்டிக் கொள்ள மைய அரசும், மாநில அரசும் போட்டி அரசியல் நடத்துகின்றன.

பிற அரசியல் கட்சிகளும் தொழிலாளர், மாணவர் என்று பிற இயக்கங்களும் கடும் எதிர்ப்புக் காட்டியதால் தான் ஜெயலலிதா ஒரு உண்மையைப் போட்டுடைத்தார். ''தமிழ்நாட்டுக்கு நேரடியாகவும், மத்திய அரசு மூலமாகவும் கடன்தரும் உலக வங்கியும், சர்வதேச நிதியமும் கட்டண உயர்வு, வரி விதிப்பு போன்ற பல நிபந்தனைகள் விதிக்கின்றன. கடன் பெற வேண்டுமானால் அதன்படி செய்ய வேண்டியிருக்கிறது'' என்றார்.

அதேபோலத்தான் சுனாமி நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட - செலவிடப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபாய்களில் ஒரு சிறு துளி அளவுதான் பிரதமர் மற்றும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தும் ''பொதுமக்கள்'' வழங்கிய நன்கொடையும் ஆகும். மிகப் பெரும் அளவிலான மீதித் தொகை எங்கிருந்து, எதற்காக வந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயமாக உள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து போன தி.மு.க. உள்ளிட்ட எம்.பி.க்களும், அமைச்சர்களும் இந்த மாநிலத்திற்காக எதுவும் செய்யவில்லை; மத்திய அரசிடம் தான்தான் போராடிப் பல கோரிக்கைகளை நிறைவேற்றி வருவதாக ஜெயலலிதா அடிக்கடி குற்றஞ்சாட்டுகிறார். அதேபோல, பல அந்நிய நாட்டு முதலீடுகளைப் பெற்று தனது சொந்த முயற்சியால் தமிழகத்தை தொழில்மயமாக்கி வருவதாக ஜெயலலிதா உரிமை பாராட்டிக் கொள்கிறார்.

இது உண்மையல்லவென்று மறுக்கும் தி.மு.க. - காங்கிரசு தரப்பு, தாம் எவ்வளவு அந்நிய முதலீடுகள், தொழில்கள் வருவதற்கு காரணமாக இருக்கிறோம் என்று பட்டியல் போடுகிறார்கள். சுய உதவிக் குழுக்களுக்கான திட்டம் - கடன், மத்திய அரசு உதவியிலானது என்றாலும் தமது சொந்த முயற்சியிலானது என்று கூறி அரசியல் ஆதாயம் தேடுகிறார், ஜெயலலிதா; அதே போல சுனாமி நிவாரணத்துக்குப் பல ஆயிரம்கோடி மத்திய அரசு வழங்கியுள்ளது; இருந்தபோதும் அவை நிர்வாகச் சீர்கேடு, ஊழல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன்படாமல் போகிறது என்கிறது எதிர்த்தரப்பு.

இப்படி இவர்கள் ''அரசியல் பண்ணுவதில்'' கொஞ்சமாவது அரசு இரகசியங்கள் வெளிப்படுகின்றன என்றாலும் வெளியே தெரியாமல் போகும் - மறைக்கப்படும் முக்கியமான உண்மைகளும் உள்ளன. எப்படி இவர்கள் போட்டி போட்டு, கொண்டு வரும் அந்நிய முதலீடுகள் - தொழில்கள் ஏகாதிபத்தியப் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் சுரண்டலுக்காக செய்யப்படுகின்றனவோ, அப்படித்தான் சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், சுனாமி நிவாரண - வெள்ள நிவாரண உதவிகள் - பணிகள் எல்லாமே ஏகாதிபத்திய சேவைக்காக உலக வங்கி - ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற அந்நிய நிதி நிறுவனங்களின் கடன்கள் - திட்டங்களுக்காகவே திட்டமிட்டு செய்யப்படுகின்றன.

சுனாமி நிவாரணத்துக்காக வழங்கப்படும் நிதி, மீனவர்கள் மீன்பிடிப் படகுகள் - வலைகள் மற்றும் மீனவர்களின் குடியிருப்புகள் போன்ற மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவிடப்படுகின்றன என்றே பலரும் எண்ணுகின்றனர். அதேபோல மழை - வெள்ள நிவாரணம் என்பது குடும்பத்துக்கு ரூ. 2,000, ரூ.1000 என்றும், விவசாயிகளுக்கு ஏக்கருக்கு இவ்வளவு என்றும் ரொக்கமாகவும், வேட்டி-சேலை, அரிசி, மண்ணெண்ணெய், சோற்றுப் பொட்டலம் ஆகியவற்றுக்காக செலவிடப்படுவதாகவும் பலரும் நம்புகிறார்கள்.

சுனாமி நிவாரணத்திற்காக இதுவரை மைய அரசு மூலம் வந்தது ரூ.679.61 கோடி ரூபாய். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக நிவாரணம் வழங்குவதற்கு மாறாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட அடிப்படை கட்டமைப்புகளைச் சீர்செய்வதற்காக என்றே உலகவங்கி ரூ. 1903.5 கோடியும், ஆசிய வளர்ச்சி வங்கி ரூ. 646.88 கோடியும், வேளாண் வளர்ச்சிக்கான உலக நிதியம் ரூ. 67.50 கோடியும் கொடுத்துள்ளன. இவையும் கடனுதவி தாமே தவிர நன்கொடை உதவி அல்ல. இவற்றிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை சீரமைக்க ரூ. 28 கோடியும், மீன்பிடிப்பு தொழிலை சீரமைக்க ரூ. 87.60 கோடியும் நான்கு, ஐந்து தவணைகளில் தரப்படும். மீதம் பெரும்பாலான தொகை சுற்றுலா வளர்ச்சி முதலிய வேறு தொழில்களுக்காக ஒதுக்கப்படும்.

இப்போது, ஜெயலலிதா கோரியிருக்கும் வெள்ள நிவாரணமும் இதே வகையானதுதான். வெள்ள நிவாரணமாக ஜெயலலிதா கோரியிருக்கும் ரூ.13,685 கோடியில் அடங்கியுள்ள விபரங்கள்; கூட்டுறவு சங்கங்களுக்கு விவசாயிகள் அசலும் வட்டியுமாக கட்ட வேண்டிய தொகையைத் தள்ளுபடி செய்யும் வகையில் ரூ. 4626 கோடி, சாலைகளைச் சீரமைக்க 2,523 கோடி, நீர்ப்பாசன ஆதாரங்களை சீரமைக்க774 கோடி, ஊரணிகள் மற்றும் குளங்களை புனரமைக்க 60 கோடி, வெள்ளப் பேரழிவால் வேலையிழந்துள்ள விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உடல் உழைப்பு வேலைவாய்ப்பு (தினக்கூலி) வழங்க ரூ. 77 கோடியே 33 லட்சம் என்று கணக்கு சொல்கிறது, ஜெயலலிதா அரசு.

கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட சத்துணவுத் திட்டம் எம்.ஜி.ஆரின் உள்ளத்தில் சுரந்த கருணை மழையின் விளைவு என்று பலரும் எண்ணுகிறார்கள்; ஆனால், அது உலகவங்கியின்


படிப்பகம்

மூளையில் உதித்த திட்டம் என்பது அவர்களுக்குத் தெரியாது. மகளிர் சுயஉதவித் திட்டம் என்பது உலக வங்கி முதலிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் நுண்கடன் வழங்கு திட்டத்தின் கீழ் வருவது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஏதோ சில தொண்டு உள்ளம் படைத்த மனிதர்களின் முயற்சியால் உருவாக்கப்படுபவை அல்ல, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்; ஏகாதிபத்தியத்தின் திட்டமிட்ட சதித்தனமான ஏற்பாடுதான்.

இவைபோலவே, சுனாமி நிவாரணம், வெள்ள நிவாரண வேலைகளிலும் உலக வங்கி முதலிய ஏகாதிபத்தியங்களின் நிதி, தொழில் நிறுவனங்களின் சதித்திட்டங்கள் ஒளிந்து கொண்டு வருகின்றன. குடிசைப் பகுதிகளையும், குப்பங்களையும் அகற்றுவது; அங்கே அந்நிய நிதி - தொழில் தேவைக்கான கட்டமைப்புகளை உருவாக்குவது என்று அடாவடித்தனமாக ஜெயலலிதா செய்த முயற்சி ஏற்கெனவே முழுமையாக நிறைவேற்றப்பட முடியவில்லை. இப்போது சுனாமி - வெள்ள நிவாரணம், மறுசீரமைப்பு என்ற பெயரில் செய்யப்படுகிறது.





அமெரிக்காவின் தேசங்கடந்த தொழில் கழகமான மைக்ரோசாஃப்டின் தலைவர் பில் கேட்ஸுடன் ஜெயா மற்றும் கருணாநிதி - தயாநிதி மாறன்: தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒருவரையொருவர் குற்றஞ்சுமத்திக் கொள்வதைக் கீழ்த்தரமான அரசியல் என விமர்சிக்கும் பத்திரிகைகள், ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்வதில் யார் முந்திக் கொள்வது என்பதில் கருணாநிதிக்கும், ஜெயாவுக்கும் இடையே நடக்கும் போட்டி அரசியலை மாநில வளர்ச்சி எனப் புனிதப்படுத்துகின்றன.

வரலாறு காணாத வெள்ள - பேரழிவில் தமிழக மக்கள் உயிரோடு அடித்துச் சென்ற அதேசமயம் தயாநிதி மாறனும் ஜெயலலிதாவும் அமெரிக்க பில்கேட்ஸ், ஜெர்மனியின் பி.எம்.டபுள்யூ முதலாளிகளோடு புதிய தொழில்களுக்கான ஒப்பந்தம் போடுகின்றனர். உலகின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான ஜெர்மனியின் பி.எம்.டபிள்யூ.வின் துணைத் தலைவர் கிளாஸ் பெர்னிங், ''இதுவரையில் பி.எம்.டபிள்யூ நிறுவனம் கண்டிராத அதிவேகமான பதிலுக்காகவும், இந்த நிறுவனம் முதலீடு செய்வதற்கு வசதியாக தமிழக அரசு காட்டிய வேகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

''வெள்ளத்திற்கு அணை போட முடியாது. ஆண்டுதோறும், போதிய அளவு மழை பெய்யும் என்று இனி திட்டவட்டமாக கூறவும் முடியாது. இந்நிலையில் விவசாயிகள் வருமானத்திற்கு உத்திரவாதம் வேண்டும் என்றால் மரபுவழி விவசாயத்தை உடனடியாக கைவிட வேண்டும். அரசு அறிமுகப்படுத்தும் ஒப்பந்த பண்ணை விவசாயத்திற்கு மாற வேண்டும். பயோ-பெட்ரோல் தயாரிக்கப் பயன்படும் சக்கரைக் கிழங்கு, சக்கரைச் சோளம், பயோ-டீசல் தயாரிக்கப் பயன்படும் காட்டாமணக்கு மற்றும் ஏற்றுமதிக்கான மலர், பழம், மூலிகை பண்ணைகளாக விவசாயத்தை மாற்றுவதுதான் ஒரே தீர்வு என்கிறது, ஜெயா அரசு. அதற்காக தனியார் முதலாளிகளுடனான ஒப்பந்த பண்ணை சாகுபடிதான் செய்ய வேண்டும் என்று விவசாயிகளை நிர்பந்திக்க, கடன், நிவாரணம் மற்றும் மானியங்களைப் பயன்படுத்தி சதி வலையைப் பின்னுகிறது, அரசு.

வெள்ளப் பேரழிவை தங்கள் கண்ணாடி மாளிகைகளிலிருந்து பார்த்து ரசிக்கும் ஏகாதிபத்திய அடிவருடிகளுக்குத் தும்மல் வந்தாலும் துடித்துப் போகிறது, பாசிச ஜெயா கும்பல்.

குறிப்பாக, சென்னையைத் தாக்கிய வெள்ளத்திற்கு முக்கிய காரணம், 17 கி.மீ. நீளத்திற்கு சென்னைக்குள் ஓடும் பக்கிங்காம் கால்வாய்! ஆக்கிரமிப்பால் அது சுருங்கி போனதால், பிதுங்கிய பெருவெள்ளம் ஏகாதிபத்திய நிறுவனங்கள் மண்டி கிடக்கும் சென்னை - கிழக்கு கடற்கரை சாலையை மூழ்கடித்து போக்குவரத்தை குலைத்து விட்டது. வெள்ளத்தால் முற்றுகையிடப்பட்ட ஏகாதிபத்திய நிறுவனங்கள் உடனடியாக நிலைமையைச் சரிசெய்யுமாறு ஜெயலலிதாவிற்கு ஆணை பிறப்பித்தன. ஜெயலலிதாவின் பட்டாளம் அவ்விடத்திற்குப் பதறிக் கொண்டு ஓடியது. அடுத்த சில நிமிடங்களில், பக்கிங்காம் கால்வாயில் இருந்து கடலுக்கு புதிய கால்வாய் வெட்ட, வரைபடத்தோடு உத்தரவு பிறந்தது.

சுனாமி நிவாரணமோ, வெள்ள நிவாரணமோ, தவறாமல் ''அரசியல் பண்ணும்'' ஆளும் கட்சிகள்-எதிர்க்கட்சிகள், ஓரளவு உண்மைகள் வெளிவர உதவினாலும், தமது ஏகாதிபத்திய சேவை பற்றிய இரகசியங்கள் மட்டும் வெளிவராமல் எச்சரிக்கையாக இருக்கின்றன. •

www.padippakam.com



# சென்னை வெள்ள நிவாரணப் படுகொலை!

# கொலைக் குற்றவாளிகளைத் தண்டிப்போம்!

தெருக்கள்தோறும் சடலங்கள், திரும்பிய பக்கமெல்லாம் அழுகுரல்கள், கதறித் துடிக்கும் உறவுகள் என்று டிசம்பர் 18-ஆம் தேதியன்று சென்னை எம்.ஜி.ஆர். நகர் எங்கும் துயரமும் சோகமும் கவ்வியது. நிவாரணம் வாங்கச் சென்ற 42 பேர் நெரிசலில் சிக்கி மாண்டு போன செய்தியை அறிந்து தமிழகமே அதிர்ச்சியில் உறைந்து போனது. கட்டிடத் தொழிலாளிகள், ஓட்டல் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், வீட்டு வேலை செய்யும் பெண்கள்... என கொல்லப்பட்டோர் அனைவரும் எளிய உழைக்கும் மக்கள். இறந்தவர்களில் 25 பேர் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றும் பெண்கள். கணவனைப் பறிகொடுத்த மனைவி, மனைவியைப் பறிகொடுத்த கணவன், பெற்றோரை இழந்து அனாதைகளாக நிற்கும் குழந்தைகள் என நிவாரணத் தொகை வாங்கப் போய் வாழ்க்கையையே தொலைத்து விட்டுப் பரிதவிக்கும் குடும்பங்களின் சோகத்தைச் சொல்லி மாளாது.

''மழை, உடைமைகளைத்தான் கொண்டு போச்சு; இந்த நிவாரணம் உயிரையே கொண்டு போயிருச்சே'' என்று சுடுகாடாகியிருக்கும் எம்.ஜி.ஆர். நகரிலிருந்து கதறுகிறாள் ஒரு தாய். துயரத்தைத் துடைப்பதற்கான நிவாரணமே துயரத்தை உருவாக்க முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறது பாசிச ஜெயலலிதா அரசு. டிசம்பர் 18-ஆம் தேதியன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 42 உயிர்களைக் காவு வாங்கியுள்ள சம்பவம் ஒரு விபத்தல்ல; படுகொலை!


டிசம்பர் 17-ஆம் தேதி - சனிக்கிழமையன்று காலை முதல் நிவாரணம் வாங்க கால்கடுக்க வரிசையில் நின்றார்கள் மக்கள். போலீசுக்கு ரூ. 400 - 500 என லஞ்சம் கொடுத்து டோக்கன் பெற முடியாததால் வெறுங்கையோடு திரும்பினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டிருந்த அறிக்கையில் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நிவாரணம் வழங்கப்படும் என்று மட்டும்தான் சொல்லப்பட்டிருந்தது. ''ஞாயிற்றுக்கிழமைதான் நிவாரணம் வாங்க கடைசி நாள்'' என்று ஒலிபெருக்கி வைத்து போலீசும் அறிவித்தது. படுகொலைகளுக்குப் பிறகு இப்போது ஜெயா கூறுவதுபோல, அதற்கடுத்த நாளும் நிவாரணம் வழங்கப்படும் என்றோ, எல்லோருக்கும் வழங்கப்படும் என்றோ அறிவிக்கப்படவில்லை. இலஞ்சம் கொடுக்க இயலாத ஏழைகள் வேறென்ன செய்ய முடியும்?

எம்.ஜி.ஆர். நகர் பகுதியிலுள்ள ஏழைகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்பது அவர்களது ஒருமாதச் சம்பளத் தொகை. ஏற்கெனவே ஒருமாத காலமாக பெய்த தொடர் மழையால் வேலையின்றித் தவித்த தினக்கூலிகளான அவர்கள், அரசின் நிவாரணத்தைப் பெற முண்டியடிப்பதில் தவறேதும் இருக்க முடியாது. எனவேதான் நள்ளிரவிலிருந்து கொட்டும் மழையில், டோக்கன் வாங்க மாநகராட்சிப் பள்ளி முன்பாகத் தவமிருந்தார்கள்.



படிப்பகம்

''ஞாயிறு காலை 9 மணிக்கு மேல்தான் நிவாரணம் வழங்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்திருக்கும் போது, நீங்கள் ஏன் நள்ளிரவிலேயே வந்தீர்கள்?'' என்று பாதிக்கப்பட்ட மக்களிடம் திமிராகக் கேட்கிறார் ஜெயலலிதா. ''என்னுடைய ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க விஷமிகள் கிளப்பிய புரளி'' என்று குற்றம் சாட்டுகிறார். ''உங்களுடைய முடிவை நீங்களே தேடிக் கொண்டீர்கள்; அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்பதுதான் இந்தத் திமிர்ப் பேச்சின் பொருள்.



ஒரே தெருவில் நான்கு மரணங்கள்....

புரளியாம்! வதந்தியாம்! தண்ணீர் லாரி வருமா, வராதா என்று கூடத் தெரியாமல் இரவு முழுவதும் காத்து நிற்கிறார்களே மக்கள், அது யார் கிளப்பிய புரளி? நாள் முழுவதும் ரேசன் கடை வாசலில் மண்ணெண்ணெய்க்காகத் தவமாய் தவமிருந்து மாலையில் காலி கேன்களுடன் வீடு திரும்புகிறார்களே மக்கள், அங்கே வதந்தியைப் பரப்பிய விஷமியார்?

உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்க்கையை வதைக்கும் விஷமிகளான அதிகாரிகளும் போலீசும் அ.தி.மு.க. முதலான ஓட்டுப் பொறுக்கிகளும்தான் இந்தப் படுகொலையையும் நடத்தியிருக்கிறார்கள். மக்களுக்கான நிவாரணத் தொகையைச் சூறையாடுவதற்கு ஏற்ற வகையில்தான் நிவாரணம் வழங்கும் முறையையே திட்டமிட்டு அமைத்திருக்கிறார்கள்.


முதலில் ஒரு இடத்தில் வரிசையில் நின்று போலீசாரிடம் ஒரு டோக்கன் வாங்க வேண்டுமாம். பிறகு, இன்னொரு இடத்திற்குச் சென்று அந்த டோக்கனைக் காட்டி ரேசன் அட்டையில் முத்திரை பெற்று வேட்டி-சேலை, அரிசி-பணத்திற்கு 4 டோக்கன் வாங்க வேண்டுமாம். அதற்குப் பின் வரிசையில் நின்று ஒவ்வொன்றையும் ஒவ்வொரு டோக்கன் கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டுமாம்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இப்படி ஒரு சிக்கலான சதிவலைக்குள் ஜெயா அரசு ஏன் தள்ள வேண்டும்? இதற்குப் பின்னால் ஒரு பெரிய திட்டமே இருக்கிறது. வெள்ள நிவாரணப் பணத்தை அ.தி.மு.க.வினர் சுருட்டிக் கொள்வதற்கும், போலீசு திருடித் தின்பதற்கும் ஏற்ப செய்யப்பட்ட ஏற்பாடுதான் இது. மிச்சமிருக்கும் நிவாரணத் தொகையை அடுத்த தேர்தலுக்கான லஞ்சமாக மாற்றி மக்களுடைய ஓட்டுக்களை விலைபேசும் திட்டம் இது. இந்தக் கொடுமையைப் பார்த்து நிவாரணமே வேண்டாமென்று ஒதுக்கிக் கொள்ளும் மக்களுக்குச் சேர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாயை அதிகாரிகளும் அமைச்சர்களும் ஒரேயடியாகச் சுருட்டிக் கொள்வதற்கும் ஏற்ற முறையில்தான் இந்த நிவாரணம் வழங்கும் முறை அமைக்கப்பட்டிருக்கிறது. சுனாமி நிவாரணத்தைச் சுருட்டி ருசி கண்டவர்கள் வெள்ள நிவாரணத்தை மட்டும் விட்டு வைப்பார்களா என்ன?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் போய்ச் சேர வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாக இருந்தால், அவரவர்க்குரிய ரேசன் கடையில் நிவாரணத் தொகையை மக்களுக்கு வழங்கியிருக்கலாம். வீடு வீடாகவோ, தெருத்தெருவாகவோ அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை வைத்து விநியோகித்திருக்கலாம். டோக்கன், லஞ்சம், கூட்டம், நெரிசல் - இவை எதற்குமே இடமில்லாமல் செய்திருக்கலாம். அப்படி எதுவும் செய்யாமல், ''எம்.ஜி.ஆர். நகர் போலீசு நிலையம்'' என்ற முத்திரை குத்தி போலி டோக்கன்களை போலீசார் விற்றது ஏன்?

இந்த விவகாரம் ஆதாரங்களுடன் அம்பலப்படத் தொடங்கியதும், தேங்காய் திருடப் போனவன் தென்னை மரத்தில் புல் பிடுங்கப் போனதாகக் கூறியதைப் போல, சென்னை போலீசு கமிஷனர் நடராஜ், ''அவை போலி டோக்கன் அல்ல; நிவாரணத் தொகை வாங்க வந்தவர்கள் வரிசையில் நின்றார்கள் என்பதற்கான அடையாள டோக்கன். அந்த டோக்கனை வாங்கிக் கொண்டால் நீண்ட ''கியூ''வில் நிற்க வேண்டியதில்லை. வசதிப்படும் நேரத்தில்

நெரிசலில் சிக்கி இறந்தவர்கள் – காயம் அடைந்தவர்களைத் தேடி அவர்களது உறவினர்கள் அரசு மருத்துவமனைக்கு வந்தபொழுது, பதற்றத்தில் தங்களது இரு சக்கர வாகனங்களை மருத்துவமனையின் வாயிலில் விட்டுச் சென்றனர். இதுதான் சமயம் என அவர்களது வாகனங்களைப் போக்குவரத்து விதிகளை மீறியதாகப் பிடித்து வைத்துக் கொண்டு, போலீசார் பணம் பிடுங்கிக் கொண்டனர்.






சென்னை எம்.ஜி.ஆர். நகர் சம்பவம் நடப்பதற்கு முதல் நாள், தி.நகர் பகுதியில் நிவாரணம் பெறுவதற்கான டோக்கன்களைப் பொதுமக்களிடம் விற்கும் போலீசு: அவலத்திலும் இலஞ்சவேட்டை. (நன்றி: தமிழ்முரசு)

நேராக கவுன்ட்டரில் கொடுத்து நிவாரணப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். கூட்ட நெரிசலை முறைப்படுத்த போலீசார் செய்த ஏற்பாடு இது'' என்கிறார்.

பத்தாயிரம் பேருக்கு இரண்டே நாளில் நிவாரணம், அதுவும் ஒரே பள்ளியில் டோக்கன் விநியோகம் என்ற இந்தச் சதித்திட்டம்தான் லஞ்சம் தலைவிரித்தாடுவதற்கும், லஞ்சம் கொடுக்க முடியாத மக்கள் மிதிபட்டுச் சாவதற்கும் வழிவகுத்திருக்கிறது. எனவேதான், சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 42 உயிர்களைக் காவு வாங்கியுள்ள சம்பவம் ஒரு விபத்தல்ல; படுகொலை! வதந்தி, விஷமிகள் பரப்பிய புரளி, நெரிசல், மக்களின் பணத்தாசை, ஒழுங்கீனம், எதிர்பாராத விபத்து என்ற வார்த்தைகளால் மூடி மறைக்கப்படும் படுகொலை! சுயமரியாதையுடன் உழைத்து வாழும் மக்களை, லஞ்சம் வாங்கியே வயிறு வளர்க்கும் இந்த மானம் கெட்ட கூட்டம் பிச்சைக்காரர்களாக நடத்தியிருக்கிறது; அதன் விளைவுதான் இந்தப் படுகொலை!

இந்தப் படுகொலையை நடத்திய குற்றவாளிகள் யார்? டோக்கனை கள்ளத்தனமாக விற்ற போலீசு மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள்; லஞ்சம் கொடுக்க மறுத்த மக்களைத் தடியடி நடத்தி விரட்டிய போலீசார், நிவாரணத் தொகையில் கமிசன் அடித்ததோடு, தன் கட்சிக்கு ஓட்டுப் போட வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்களைக் கூறு போட்டு டோக்கன் விநியோகித்த அ.தி.மு.க.வினர், வெள்ள நிவாரணம் என்ற பெயரில் அடுத்த தேர்தலைக் குறிவைத்து இந்தக் கிரிமினல் திட்டத்தை வகுத்தளித்த ஜெயலலிதா.... இவர்கள் அனைவரும்தான் இந்தப் படுகொலைக்குப் பொறுப்பான குற்றவாளிகள்!

எதிர்கட்சிகள் நடத்திய மௌன அஞ்சலி - கறுப்புக் கொடி ஊர்வலமும், ஜெ. பதவி விலக வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையும் இந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்கப் போவதில்லை. அவ்வாறு தண்டிக்க வேண்டுமென்று அவர்கள் கோரவுமில்லை. மாறாக, வெள்ள நிவாரணம் வழங்க சர்வ கட்சிக் குழு அமைக்க வேண்டுமென்பதும், ஊழலில் தமக்கும் பங்கு வழங்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை.



(நன்றி: நக்கீரன்)

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த சந்திர சேகரனைப் பொறுப்பிலிருந்து மாற்றியதைத் தவிர வேறு எந்த அதிகாரி மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எந்தவொரு போலீசுக்காரன் மீதும் இன்றுவரை எந்த நடவடிக்கையுமில்லை. அதேசமயம், வதந்தியைப் பரப்பினார் - புரளியைக் கிளப்பினார் என்று எதிர்க்கட்சி பிரமுகர்கள் கைது செய்யப்படுகிறார்கள்; விசாரணைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். ''நகரத்தில் வாழும் மக்களுக்கு எதிலும் பொறுமை கிடையாது; இது மக்களின் பணத்தாசையால் ஏற்பட்ட பலி; இலவச வேட்டி-சேலை வழங்குவதையே கொள்கையாகக் கொண்டு மக்களைப் பிச்சைக்காரர்களாக நடத்தும் கழகங்களின் கவர்ச்சிவாத அரசியல்தான் காரணம்; 30,000 பேருக்கு ஒரேநாளில் எவ்வித அசம்பாவிதமும் இன்றி நிவாரணப் பொருட்களை விநியோகித்துள்ள நிலையில், அதை விடக் குறைவான எம்.ஜி.ஆர். நகர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் நடந்த துயரச் சம்பவத்துக்கு காரணம் வதந்தியும் புரளியும்தான்'' - என்றெல்லாம் அதிகார வர்க்கத்தினரும் போலீசு அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் ஆளுக்கொரு கோணத்தில் குற்றவாளிகளைத் தப்புவிக்க முயற்சிக்கிறார்கள்.

இலவச சேலைக்காக மிதிபட்டுச் சாவு, கஞ்சித் தொட்டியின் முன் தடியடி, வியாசர்பாடியில் படுகொலை, இன்று எம்.ஜி.ஆர். நகர் படுகொலை... என்று தொடரும் இந்த அநீதிக்கு முடிவு கட்ட வேண்டுமானால், 42 பேரைச் சாவுக்குத் தள்ளிய பாசிச ஜெயலலிதா உள்ளிட்ட குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட்டாக வேண்டும். அதற்காகப் போராடுவதன்மூலம்தான் இந்தக் கிரிமினல்களின் திமிருக்கு முடிவு கட்ட முடியும்.

www.padippakam.com

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

வெறுமனே வன்முறைக்காக வன்முறை, வன்முறை வழிபாடு என்பதெல்லாம் போலி கம்யூனிஸ்ட் மூளைகளில் உதித்த திருத்தல்வாதம்தான்!

நக்சல்பாரி இயக்கம் பிளவுபட்டுப் போனது, குழுக் களாக செயல்படுவது பற்றி நக்கலாக எழுதுகிறார் யெச்சூரி. இந்தக் குழுக்களிடையே நிலவுவது, புரட்சியை எப்படிச் சாதிப்பது என்கிற வேறுபாடுதானே தவிர, கேரளத்திலும், மே.வங்கத்திலும் சி.பி.எம். கட்சிக்குள் நடப்பதைப் போல பதவிச் சண்டையோ, இலஞ்ச - ஊழல் போட்டியோ அல்ல. சினிமாக்காரன்களின் புகழ்பாடியோ ''புரட்சித் தலைவி ஆசி பெற்ற சி.பி.எம். வேட்பாளர்'' என்று கூறியோ ஓட்டுப் பொறுக்கும் கட்சியின் தலைவருக்கு இதெல்லாம் தெரியாத தில்லை!

● சுப்பு

# ''கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்!''

## — மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) கண்டன ஆர்ப்பாட்டங்கள்

''சென்னை எம்.ஜி.ஆர். நகரில் வெள்ள நிவாரணம் வாங்கச் சென்ற 42 பேர் பலியான சம்பவம், விபத்து அல்ல, படுகொலை! இதற்குக் காரணமான குற்றவாளிகளான போலீசுத் துறை, வருவாய்த்துறை அதிகாரிகளைக் கைது செய்து தண்டிக்க வேண்டும்; அவர்களை உடனடியாகப் பணிநீக்கம் செய்ய வேண்டும். பலியானோர் குடும்பங்களுக்கு ரூ. 5 லட்சம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்'' ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தும் நிவாரணம் பெறவந்த மக்களைப் பலியிட்ட அரசின் - அதிகார வர்க்கத்தின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) மதுரை மாவட்டக் கிளையின் சார்பில் 22.12.05 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கிளைத் தலவர் ஆர். நல்லகாமன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு வழக்கறிஞர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சின்னராசா, தமிழ்நாடு பார் கவுன்சில் உறுப்பினரான வழக்குரைஞர் கி.மகேந்திரன் மற்றும் பல முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு முன்னதாக, நீதிமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கிடையாது என்று போலீசு அதிகாரிகள் அடாவடி செய்தனர். ''அனுமதி கேட்டுத்தான் துண்டறிக்கை அச்சிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறோம்; அனுமதி இல்லை என்றால் எழுத்துப் பூர்வமாகக் கொடு; இல்லாவிட்டால், நாங்கள் நடத்துவோம்'' என்று வழக்குரைஞர்கள் ஒருமித்து எச்சரித்ததும் போலீசுத்துறை பின்வாங்கிக் கொண்டது. மனித உரிமைக்கான இயக்கத்தினருக்கும் வழக்குரைஞர்களுக்குமே இவ்வளவு கெடுபிடி என்றால், சாதாரண மக்களின் நிலை என்னவாகும் என்று போலீசாரின் அடாவடித்தனத்தை திரண்டிருந்த மக்கள் கண்டித்தனர்.

நாமக்கல் மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக, 21.12.05 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொலைக் குற்றவாளிகளான போலீசுத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாவட்ட அமைப்பாளர் எம்.குணசேகரன் தலைமை தாங்கினர். கோரிக்கைகளை முன்வைத்தும் மக்களைப் பலியிட்ட அரசின்-அதிகார வர்க்கத்தின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

தருமபுரி மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சார்பில் 21.12.05 அன்று தருமபுரி - இராசகோபால் பூங்கா அருகில், சென்னையில் 42 பேர் பலியான சம்பவத்துக்குக் காரணமான கொலைக் குற்றவாளிகளான போலீசுத்துறை, வருவாய்த் துறை அதிகாரிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும் அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வழக்குரைஞர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

கடலூர் மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சார்பில், விருத்தாசலம் பேருந்து நிலையம் அருகே 21.12.05 அன்று கொலைக்குக் காரணமான அதிகாரிகள் - போலீசாரைத் தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாவட்டச் செயலர் சி.ராஜு தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், வழக்குரைஞர்கள் திரளாகப் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

வதந்தியால் ஏற்பட்ட பலி என்று ஆட்சியாளர்கள் கொலைகாரர்களை மூடி மறைத்துவரும் நிலையில், குற்றவாளிகளை இனம் காட்டுவதாக இந்த ஆர்ப்பாட்டங்கள் அமைந்தன.

— பு.ஜ. செய்தியாளர்கள்.

மதுரை நீதிமன்ற வளாகத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுக்கப் பாய்ந்து வந்த போலீசு ஆய்வாளருடன் வாக்குவாதம் செய்யும் வழக்குரைஞர்கள்.





படிப்பகம்

### வெள்ளப் பகுதிகளில் புரட்சிகர அமைப்புகளின்

# நிவாரணப் பணிகள் போராட்டப் பணிகள்

கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் தமிழகத்தைத் தாக்கிய பெரு மழை - பெரு வெள்ளத்தால் இருக்கின்ற வாழ்வும் சிக்கலாகி உழைக்கும் மக்கள் நிர்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத்தகைய இயற்கைப் பேரிடர் - பேரழிவு மக்களைத் தாக்கும் போது, நிவாரணம் - மீட்புப் பணிகளில் ஈடுபடுவது ஒரு அரசியல் இயக்கத்தின் கடமை மட்டுமல்ல; ஒவ்வொரு மனிதனின் தார்மீகப் பொறுப்பாகவும் இருக்கிறது.

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்கள் வெள்ளக்காடாக மாறி, குறிப்பாக சென்னை, கடலூர், திருச்சி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் உடனடியாக கடமையாற்றக் களத்தில் இறங்கின. கடந்த நவம்பர் இறுதியில் தொடங்கிய இந்தப் பணி இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அரசு நிவாரணத்தை சர்வ கட்சிக் குழு அமைத்து பொறுக்கித் தின்ன குரல் கொடுக்கும் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் நிவாரணப் பணிகளைச் செய்யவோ, மக்களைத் திரட்டிப் போராடவோ முன்வரவில்லை. ஓட்டுக் கட்சிகளின் மனிதாபிமானம், கண்ணீர் அஞ்சலி என்ற மாய்மாலங்களைக் கிழித்துப் போட்டு, போராட அறை கூவியதோடு போராட்டங்களை முன் நின்று நடத்திய காரணத்தால் புரட்சிகர அமைப்புகளின் நிவாரணப் பணிகள் செய்தி ஊடகங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டன.

**திருச்சி** - குழுமணி, அருகிலுள்ள, அரவானூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு வெளியேற முடியாதபடி தனித்தீவாகி விட்ட போது, விரைந்து அங்கு சென்ற தோழர்கள், அதிகாரிகள் - போலீசார் - தீயணைப்புத் துறையினருக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்து உதவி கோரினர். ஆனாலும், அதிகார வர்க்கமும் போலீசும் அசைந்து கொடுக்கவில்லை. தீயணைப்புத் துறையினரோ, கடவுளை வேண்டிக் கொள்ளுமாறு கூறினர். மீண்டும் தொடர்பு கொள்ள முயற்சித்த போது, அதிகார வர்க்கம் தமது தொலைபேசித் தொடர்பையே துண்டித்து முடமாக்கி வைத்திருப்பது தெரிந்தது. உணவு இல்லை; குடிக்கத் தண்ணீரும் இல்லை. உயிரின் ஆதாரமான தண்ணீரை வறட்சியின்போது மட்டுமின்றி, இப்போது வெள்ளத்தின் நடுவேயும் தேடித் தவித்தனர், பாதிக்கப்பட்ட இக்கிராம மக்கள்.

நிலைமை விபரீதமாவதை உணர்ந்த தோழர்கள், வெள்ளத்தில் இறங்கி எதிர்நீச்சலடித்து திருச்சி உறையூர் வந்து இதர தோழர்களுக்குத் தகவல் தெரிவித்து, உணவுப் பொட்டலங்கள், பால், பிஸ்கட், தண்ணீர் பாக்கெட்டுகளைச் சேகரித்து, அரவானூர் கிராம மக்களிடம் வீடுவீடாகச் சென்று விநியோகித்தனர். பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கு தோழர்கள் கொடுத்தது சிறுதுளிதான் என்றாலும், உரிய தருணத்தில் செய்த இந்த உதவியை மக்கள் நெகிழ்ந்து பாராட்டினர்.

மூன்று நாட்களாகியும் அரசிடமிருந்து எந்தவொரு நிவாரண உதவியும் வந்து சேராத நிலையில், இனி போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை விளக்கி, அம்மக்களை அணிதிரட்டி நவம்பர் 27 அன்று உறையூர் நாச்சியார் கோவிலிருந்து ஊர்வலமாகச் சென்று தில்லைநகர் மெயின் ரோட்டில் தோழர்கள் முன்னின்று சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். அதைத் தொடர்ந்து, இம்மாவட்டத்திலேயே முதன்முதலாக அரவானூர் கிராம மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

திருவரம்பூர் - கல்லணை அருகேயுள்ள அரசாங்குடி எனும் கிராமம் புதாறு உடைப்பால் கடந்த நவம்பர் இறுதியில் சுமார் 6 அடி வரை நீரில் மூழ்கியது. வெள்ளத்தால் பரிதவித்த மக்கள் பல நாட்களாக சோறு - தண்ணீர் இல்லாமல் தத்தளித்தனர். தாயுள்ளத்தோடு 'அம்மா' நிவாரணம் கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் இருந்த மக்களின் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்தது. புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள், அரசாங்கத்தின் அலட்சியத்தை எதிர்த்துப் போராடாமல் நிவாரணம் கிடைக்காது என்ற உண்மையை அவர்களிடம் விளக்கி போராட அறைகூவினர். தோழர்களின் வழிகாட்டுதல்தான் சரியானது என்பதை உணர்ந்த மக்கள் திருவரம்பூர் - துவாக்குடி சாலையில் மறியல் போராட்டம் செய்தனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, போலீசார் ஓடோடி வந்து ஆவன செய்வதாக நைச்சியமாகப் பேசி போராட்டத்தைக் கைவிடக் கோரினர். சி.பி.எம். உள்ளிட்ட ஓட்டுக் கட்சிப் பிரமுகர்கள் மறியலைக் கைவிடக் கோரியபோதிலும் மக்களது போராட்ட உறுதியை அசைக்க முடியவில்லை. நாங்களெல்லாம் இருக்கும்போது ம.க.இ.க. காரங்க பின்னாடி ஏன் போறீங்க? என்று உள்ளூர் ஓட்டுக் கட்சி பிரமுகர்கள் புலம்பித் தீர்த்தனர். மறுநாள், வருவாய்த்துறை அதிகாரியின் முன்னிலையில், நிவாரணம் வழங்கு

**ம.க.இ.க. தலைமையில் மேலபாண்ட மங்கலத்தில் நடக்கும் மறியல் போராட்டத்தைக் கைவிடக் கோரி மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தும் திருச்சி மாநகராட்சி ஆணையர் ஹர்மந்தர் சிங்.**





படிப்பகம்

www.padippakam.com

தாக உறுதியளித்த பின்னரே இம்மறியல் போராட்டம் முடிவுக்கு வந்தது.

குழுமணி அருகிலுள்ள ஏகிரிமங்கலம், என்.சாத்தனூர், சீராத்தோப்பு கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்த பின்னரும் அதிகார வர்க்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. புரட்சிகர அமைப்புகளின் வழிகாட்டுதலில், இக்கிராமங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பெண்கள் திரண்டு வட்டார வளர்ச்சி அதிகாரியை முற்றுகையிட்டுப் போராடியதும், அடுத்த இரு நாட்களில் நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

அரவானூர், நாடார் தெரு, உறையூர், அரசங்குடி, கல்நாயக்கன் தெரு முதலான பகுதிகளில் தோழர்களது முன்முயற்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அணிதிரண்டு போராடினர். போராடிய பகுதிகளில் அடுத்த இரு நாட்களில் நிவாரணம் கிடைத்தது. இவற்றால் உத்வேகமடைந்த திருச்சி நகர மக்களும், சுற்றுப்புற கிராமங்களின் மக்களும் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடத் தொடங்கினர். திருச்சி மாவட்டத்தில் நாள்தோறும் மறியல், முற்றுகை என போராட்டங்கள் தொடர்ந்தன. போராடும் மக்களிடம், ம.க.இ.க.காரன் தூண்டிவிட்டானா? என்று போலீசாரும் அதிகாரிகளும் தமது வெறுப்பைக் கொட்டி புலம்பித் தீர்த்தனர்.

**சென்னை** - மதுரவாயல் பகுதியில் உள்ள உழைக்கும் மக்களின் குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்தபோது, ஏ.சி.சண்முகத்துக்குச் (முதலியார் சங்கம்) சொந்தமான எம்.ஜி.ஆர். பொறியியல் கல்லூரியை வெள்ளம் சூழ்ந்ததையே தொலைக்காட்சிகள் படம் பிடித்துக் காட்டின. உழைக்கும் மக்களின் குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் பெருகியதற்குக் காரணமே, ஏ.சி. சண்முகம் கூவம் ஆற்றை ஆக்கிரமித்து எழுப்பிய கல்லூரிக் கட்டிடங்கள் தான். வெள்ளத்துக்கு முன்னரே, ஏ.சி.சண்முகத்தின் சட்டவிரோத - மக்கள் விரோத ஆக்கிரமிப்பை எதிர்த்து சுவரொட்டி இயக்கம் மேற்கொண்ட பு.மா.இ.மு. தோழர்கள், வெள்ளத்தின்போது கல்லூரிக்கு வந்த மாவட்ட ஆட்சியரை, மக்களைத் திரட்டி முற்றுகையிட்டு இந்த ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி முறையிட்டனர்.



**போராட்டம் இன்றி மறுவாழ்வு இல்லை: திருச்சி-தஞ்சை நெடுஞ்சாலையில் பு.மா.இ.மு. செயலர் தோழர் தண்டபாணி தலைமையில் அரசங்குடி மக்கள் நடத்திய மறியல் போராட்டம்.**

டிசம்பர் முதல்வாரத்தில், சென்னையில் மழையும் வெள்ளமும் பெருக்கெடுத்தபோது, மதுரவாயல் பகுதிவாழ் உழைக்கும் மக்களை மீட்டு, அருகிலுள்ள திருமண மண்டபத்தில் தங்க வைத்து, ஏறத்தாழ 2000 பேருக்கு தொடர்ந்து 4 நாட்களுக்கு தோழர்கள் உணவு வழங்கினர். முறையாக நிவாரணம் கிடைக்க உரிய ஏற்பாடுகளை முன்னின்று நடத்தினர். மதுரவாயல் பகுதியில் ஏ.சி.சண்முகத்தின் கல்லூரிக் கட்டிடங்களோடு, உழைக்கும் மக்களின் குடியிருப்புகளையும் இடிக்க நடந்து வரும் முயற்சிகளுக்கு எதிராகவும், மருத்துவமுகாம் - குடிநீர் வசதிகளுக்காகவும் மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி, போராடுவதற்கு அணிதிரட்டி வருகின்றனர்.

நவம்பர் இறுதியில் பெருமழையின் காரணமாக சாத்தனூர் அணையிலிருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி அதிக அளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், **கடலூரின்** மஞ்சக்குப்பம் - தட்சிணாமூர்த்தி நகர் முதலான பகுதிகள் வெள்ளக்காடாகியது. தொடர்ந்து வெள்ளம் உயர்ந்ததால், உழைக்கும் மக்கள் தமது உடைமைகளை இழந்து 22.11.05 அன்று நள்ளிரவிலிருந்தே உயிர்பிழைக்க நீந்தி வெளியேறினர். கொட்டும் மழையில் எங்கே தங்குவது என்று புரியாமல் அலைபாய்ந்தனர். ஏறத்தாழ 4 நாட்களாக அரசு எந்த உதவியோ ஏற்பாடோ செய்யாத நிலையில், பு.மா.இ.மு. தோழர்கள் ஒரு திருமண மண்டபத்தைத் திறந்துவிட ஏற்பாடு செய்து, இம்மக்களைப் பாதுகாப்பாக தங்க வைத்தனர். இப்பகுதியிலுள்ள வியாபாரிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்களிடம் நன்கொடைகள் திரட்டி உடனடியாக உணவுக்கு ஏற்பாடு செய்தனர். பின்னர், மக்களிடம் கையெழுத்து வாங்கி, நிரந்தர முகாம் அமைத்து நிவாரணம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனுகொடுத்தும் கூட, அதிகார வர்க்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பட்டினியால் பரிதவித்த மக்கள், தோழர்களின் வழிகாட்டுதலின்படி மறியல் போராட்டத்தில் இறங்கினர். உள்ளூர் ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களின் சதிகள், போலீசாரின் அச்சுறுத்தல்களை மீறி, உறுதியாக நடந்த இப்போராட்டத்தைத் தொடர்ந்து, அதிகார வர்க்கம் அம்மக்களுக்கு ஒருவார காலத்திற்கு உணவு வழங்கி, மருத்துவ முகாம் அமைத்துக் கொடுத்து உதவியது.

கடலூர் அருகே காரைமேடு, சேத்தியா தோப்பு அருகிலுள்ள பின்னலூர், அம்பாள்புரம், மஞ்சக் கொல்லை முதலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்த போது, புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் விரைந்து சென்று மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டனர். பல கிராமங்களில் அரசு நிவாரணத்தை விநியோகிக்கும் பொறுப்பை தோழர்களிடமே பஞ்சாயத்து தலைவர்கள் ஒப்படைத்தனர்.

''எங்களுக்கு காசு பணமோ, நிவாரணமோ பெரிசில்லை. நாங்க பரிதவிச்சு நிக்குற நேரத்துல, எங்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட யாருமில்லையேன்னு வேதனைப்பட்டோம். நீங்க வந்து ஆறுதல் சொன்னதோடு, உதவியும் செஞ்சீங்களே, அத எங்க உசுருள்ளவரைக்கும் மறக்க மாட்டோம்'' என்று தோழர்களிடம் நா தழுதழுக்கக் கூறிய இப்பகுதிவாழ் பெண்கள், நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தோழர்களுக்கு தங்கள் கையால் சோறாக்கிப் போட்டு தமது அன்பை வெளிப்படுத்தினர். உடைமைகளை இழந்து எதிர்காலமே இருண்ட காலமாகி அச்சுறுத்திக் கொண்டிருந்த நிலையிலும், மக்கள் வெளிப்படுத்திய போர்க்குணமும் தோழர்கள் மீது அவர்கள் காட்டிய அன்பும் நெகிழச் செய்பவையாக இருந்தன.

**● பு.ஜ. செய்தியாளர்கள்**


படிப்பகம்

www.padippakam.com

### பெங்களூர் "கால் செண்டர்" பெண் ஊழியர் கொலை:

# அந்நியச் செலாவணி வருமானத்தின் பலிகிடாக்கள்!

பெங்களூர் நகரில், பிரதிபா மூர்த்தி என்ற "கால் சென்டர்" நிறுவன பெண் ஊழியர் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதை, அனுதாபம், கண்ணீர் அஞ்சலி என்ற வழக்கமான சடங்குகளுக்குள் முடித்துவிடத் துடிக்கிறார்கள், அத்தொழிலில் ஜாம்பவான்கள். இந்தச் சம்பவத்தை அதற்கு மேல் நீட்டித்துக் கொண்டே போனால், இந்த நவீனத் தொழிலில் வேலை பார்க்கும் ஊழியர்களின் பரிதாபகரமான நிலை வெட்ட வெளிச்சமாகி விடுமோ என அஞ்சுகிறார்கள், "கால் சென்டர்" தொழில் அதிபர்கள்.

டிசம்பர் 13-ந் தேதி அதிகாலை "ஷிப்டு"க்குக் கிளம்பத் தயாராக இருந்த பிரதிபாவை அழைத்துச் செல்ல சிவக்குமார் என்ற ஓட்டுநர் கார் ஓட்டி வந்தார். அவரை வழக்கமாக அழைத்துச் செல்ல வரும் ஓட்டுநர் ஜகதீஷுக்குப் பதிலாக, கம்பெனி தன்னை அனுப்பியதாகப் புதிய ஓட்டுநர் கூறியதை நம்பி, பிரதிபாவும் வேலைக்குக் கிளம்பி விட்டார். அவர், சிவக்குமாருடன் காரில் சென்று கொண்டிருந்த பொழுதே, வழக்கமான கார் ஓட்டுநரான ஜகதீஷ், பிரதிபாவை அவரது "செல்போனில்" தொடர்பு கொண்டு, தான் அவரை வேலைக்கு அழைத்துச் செல்ல வந்து கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். பிரதிபா தன்னை ஏற்கெனவே சிவக்குமார் அழைத்துச் சென்று கொண்டிருப்பதை ஜகதீஷிடம் கூறிவிட்டு, சிவக்குமாரிடம் பேசச் சொல்லியிருக்கிறார். சிவக்குமார், ஜகதீஷிடம், "தன்னை கம்பெனி அனுப்பி வைத்திருப்பதாக"க் கூறிவிட்டு, தொலைபேசியின் இயக்கத்தை நிறுத்திவிட்டார். ஜகதீஷ் உடனடியாக இந்த விசயத்தை பிரதிபா வேலை பார்த்த "ஹெச்.பி." (ஹெவ்லட் அண்ட் பேகார்ட்) நிறுவனத்திடம் கூறிவிட்டு, பிற ஊழியர்களை அழைத்து வரச் சென்று விட்டார்.

ஆனால், பிரதிபா அன்று வேலைக்கே வரவில்லை. பிரதிபாவின் உறவினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அவரைத் தேடத் தொடங்கிய போலீசார், அவரது பிணத்தை அவர் வீட்டில் இருந்து 5 கி.மீ. தொலைவில் இருக்கும் அஞ்சனாபுரம் பகுதியில் கண்டெடுத்தனர். ஜகதீஷ் மூலம் சிவக்குமாரைப் பிடித்து போலீசார் நடத்திய விசாரணையில், பிரதிபா சிவக்குமாரால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, பின் கத்தியால் கழுத்து அறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட உண்மை தெரிய வந்தது.

இக்கொலையை விசாரித்து வரும் பெங்களூர் நகர போலீசு கமிசனர் அஜய் குமார் சிங், "இக்கொலைக்கும், ஹெச்.பி. நிறுவனத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்றாலும், பிரதிபாவைத் தனக்குப் பதிலாக சிவக்குமார் அழைத்து வருவதை ஜகதீஷ் சொல்லியவுடன், அந்நிறுவனம் இந்த விசயத்தில் கவனம் செலுத்தியிருந்தால் பிரதிபாவைக் காப்பாற்றியிருக்கலாம்" எனக் கூறியிருக்கிறார்.

"நள்ளிரவு நேரத்தில் வேலைக்குக் கிளம்பும் ஊழியர்களுக்கு, அவர்களை அழைத்துச் செல்ல வரும் ஓட்டுநரின் பெயர்; வண்டியின் எண் ஆகியவற்றை தொலைபேசி குறுஞ்செய்தி (SMS) அனுப்புவதற்கு 50 காசுதான் செலவாகும். ஊழியர்களை மதிக்காத கால்சென்டர் நிறுவனங்கள், இதைச் செய்வதேயில்லை" எனக் குறிப்பிடுகிறார், கால் சென்டர் ஊழியர்களின் நலச் சங்க அகில இந்தியப் பொதுச் செயலாளர் கார்த்திக் சேகர்.

பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்யும் பன்னாட்டு நிறுவனமான ஹெச்.பி. அற்பக்காசு 50 பைசாவை செலவழித்திருந்தால், பிரதிபா உயிர் இழந்திருக்க மாட்டார். ஆனால் அந்நிறுவனமோ, "இந்தப் படுகொலையைச் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாகக் காட்டி" நழுவிக் கொள்கிறது.

பிரதிபா கொலை செய்யப்பட்ட அன்று, அவரைத் தேடி வந்த உறவினர், மாலை ஆன பின்னும் கூட அவர் வீடு திரும்பாததால், பதற்றத்தோடு ஹெச்.பி. நிறுவனத்திடம் பிரதிபா பற்றி விசாரித்திருக்கிறார். அந்நிறுவன அதிகாரிகளோ, சிவக்குமார் என்ற ஓட்டுநருடன் அவர் நள்ளிரவு 2 மணிக்கே வேலைக்குக் கிளம்பிவிட்டார் எனத் தெரிந்திருந்தும், "அவர் இன்று வேலைக்கு வரவில்லை" எனப் பொறுப்பற்ற முறையில் கூறியுள்ளனர். இது பற்றி பத்திரிக்கையாளர்கள் கேட்டபொழுது, "ஊழியரை அழைத்துவர கார் அனுப்புவதுதான் எங்கள் பொறுப்பு" எனத் திமிராகப் பதில் அளித்துள்ளனர்.

"நள்ளிரவு தாண்டி வேலைக்கு வரும் / வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் ஊழியர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் நிறுவனங்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என்பது சர்வதேச அளவில் பின்பற்றப்படும் நடைமுறை. ஆனால், இந்த நடைமுறைகளை இந்தியாவில் கால் சென்டர் நிறுவனங்கள் ஒத்துக் கொண்டதேயில்லை. தெருவோரக் குப்பைகள் உள்ளே நுழைந்துவிட்டு வெளியே போவதை போலத்தான், ஊழியர்களை நிறுவ்னங்கள் மதிக்கின்றன. முதலாளிகளுக்கு சங்கம் வைத்துக் கொண்டு, ஊழியர்கள் சங்கம் வைத்துக் கொள்ளும் உரிமையை மறுக்கும் விசித்திரமான தொழில் இது" எனக் குறிப்பிடுகிறார் கார்த்திக் சேகர்.

இவர் எதை எதைக் குற்றமாக, குறைகளாகப் பார்க்கிறாரோ, அதைத்தான் தொழிலாளர் நலச் சீர்திருத்தம் என்கிறார்கள், ஆட்சியாளர்கள். பெண்களை இரவு நேரங்களில் பணியில் அமர்த்துவதை தடை செய்திருந்த சிப்பந்திகள் - ஊழியர்கள் சட்டம், தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களுக்காகவே திருத்தப்பட்டு, பெண்களை இரவுப் பணியில் அமர்த்தும் சுதந்திரத்தை முதலாளிகளுக்குக் கொடுத்தது. இரவு நேரப் பணிகளுக்கு வரும் பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்பு குறித்து, சட்டத் திருத்தம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நள்ளிரவில் கால்சென்டர் வேலைக்குக் கிளம்பிச் செல்லும் பெண்கள், தங்களின் பாதுகாப்பைத் தாங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் எனப் பொறுப்பை அவர்கள் தலையில் கட்டிவிட்டார்கள்.

பிரதிபாவின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்ட பிறகுதான், கால் சென்டர் முதலாளிகள், அரசு, போலீசு என அனைவரும், ஆளுக்கொரு பக்கமாக நின்று கொண்டு பெண் ஊழியர்களின் பாதுகாப்பு குறித்து முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். இதிலும் கூட, ஊழியர்களை வேலைக்கு அழைத்து வரும் ஓட்டுநர்களை, யோக்கிய சிகாமணிகளாகப் பார்த்து நியமித்து விட்டால், எல்லாம் சரியாகி விடும் என்பது போல



படிப்பகம்

www.padippakam.com




பிரதிபாவைக் கொன்ற ஓட்டுநரைத் தூக்கிலிடக் கோரும் கால் சென்டர் ஊழியர்கள், தங்கள் சக ஊழியர்கள் பலரைத் தற்கொலைக்குத் தள்ளிவரும் முதலாளிகள் குறித்து மௌனம் சாதிக்கிறார்கள். (உள்படம்) பிரதிபா மூர்த்தி.

இப்பிரச்சினையைச் சுருக்கி விடுகிறார்கள். ஓட்டுநர்களின் கடந்த காலத்தைப் பற்றி விசாரிப்பது; அவர்களைப் பற்றிய விவரங்களை போலீசிடம் தெரிவிப்பது; பெண் ஊழியர்களை நள்ளிரவு நேரங்களில் வேலைக்கு அழைத்து வரும் பொழுதோ / வீட்டிற்கு அனுப்பும் பொழுதோ காவலாளி துணையுடன் அனுப்புவது என்று பலவகையான ஆலோசனைகள் பரிசீலிக்கப்படுகின்றன.

''இந்த ஆரம்ப சூரத்தனங்கள் எல்லாம் எத்தனை நாள் நீடிக்கும்? பெண் ஊழியர்களின் துணைக்குக் காவலாளிகளை அனுப்புவதை, செலவைக் காரணமாக வைத்து ஏற்கெனவே பல நிறுவனங்கள் ரத்து செய்துவிட்டன. தொழிலை இலாபகரமாக நடத்த செலவைக் குறைப்பதை வழிமுறையாகப் பின்பற்றும் இந்த நிறுவனங்கள், ஊழியர்களின் நலன் - சலுகைகளில்தான் முதலில் கை வைப்பார்கள்'' என கால் சென்டர் ஊழியர்கள் சிலரே, முதலாளிகளின் போலித்தனத்தை அம்பலப் படுத்துகின்றனர்.

தகவல் - தொழில்நுட்பத் தொழிலின் பிதாமகனாக மதிக்கப்படும் இன்ஃபோசிஸ் அதிபர் நாராயணமூர்த்தி, இப்படுகொலை நடந்த பிறகு புவனேசுவரில் நடந்த இத்தொழில் தொடர்பான மாநாட்டில், பெண் ஊழியர்களின் பாதுகாப்பு குறித்துப் பேசவில்லை. மாறாக, தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களிடம் உள்ள புள்ளி விவரத் தகவல்களை, ஊழியர்கள் திருடி விடாமல் தடுப்பதற்கு சட்டப் பாதுகாப்புத் தர வேண்டிய அவசியம் பற்றித்தான் பேசியிருக்கிறார்.

கால்-சென்டரில் பொறியாளராக வேலை பார்த்த பிரதிபா, ஓட்டுநரின் காமவெறிக்குப் பலியானது வெளியே தெரிந்த அளவிற்கு, இந்த நவீனத் தொழிலில் மென்பொருள் தொழில்நுட்ப வல்லுநர்களாகப் பணியாற்றும் பல இளைஞர்கள் - இளம் பெண்கள், வேலைப் பளுவால் மனச்சுமை அதிகமாகித் தற்கொலைக்குத் தள்ளப்படுவது வெளியே தெரிவதில்லை. சமீபத்தில், சென்னையில் ஒரு தகவல்-தொழில் நுட்ப ஊழியர் 6-வது மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார். மனச்சுமை அதிகமாகித் தற்கொலையை நாடுபவர்களுக்கு ஆலோசனை வழங்கும், சென்னையைச் சேர்ந்த ''சிநேகா'' என்ற தன்னார்வ அமைப்பிற்கு மென்பொருள் தொழில்நுட்ப வல்லுநர்களிடமிருந்து மட்டும், ஆலோசனை கேட்டு 150-க்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்திருப்பதாக ''இந்து'' நாளிதழ் (டிச.13, 05) செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இலக்கை நிறைவேற்றுவதற்காக ஓய்வே இல்லாமல் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வேலை வாங்கப்படுவது; மனைவி, குழந்தைகள், நண்பர்கள் என யாருடனும் ஒய்வாகப் பொழுதைக் கழிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போவது - இப்படிபட்ட இறுக்கமான சூழலே சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்துவரும் ஊழியர்களை மனச் சோர்வடையச்செய்து விடுகிறது. பிரதிபாவின் இறுதி ஊர்வலத்தில் சக ஊழியர்கள் கலந்து கொள்ளப் போவதற்குக் கூட பல கால் சென்டர் நிறுவனங்கள் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. அந்தளவிற்கு ஊழியர்களை, உணர்ச்சிகளற்ற இயந்திரம் போல இம்முதலாளிகள் மாற்றி வருகிறார்கள்.

இப்படி மனச்சுமையால் சோர்ந்து போவது இந்தத் தொழிலில் சகஜமாக இருப்பதை முதலாளிகளே ஒப்புக் கொள்கின்றனர். ''இப்படிபட்டவர்களுக்கு இந்த நிறுவனங்கள் எந்த உதவியும் பெரிதாகச் செய்வதில்லை. மாறாக, அவர்களைக் கருவேப்பிலை போலத் தூக்கிப் போட்டு விடுகிறார்கள். இல்லையென்றால், வேலை தராமல் காத்திருப்போர் பட்டியலில் வைத்து, பைத்தியக்காரர்கள் போல ஆக்கி விடுகின்றனர்'' என்கிறார், கார்த்திக் சேகர்.

பிரதிபாவின் படுகொலை சம்பவம், கால் சென்டர் முதலாளிகளுக்கு ஊழியர்களின் பாதுகாப்பு குறித்த கவலையை ஏற்படுத்தவில்லை. மாறாக, இச்சம்பவம் ஊழியர்களின் கோபத்தைக் கிளறிவிட்டு, சங்கம் வரை சென்றுவிடுமோ என அவர்களை அச்சப்படச் செய்துவிட்டது. இதன் காரணமாக, பிரதிபாவின் படுகொலைக்கு நியாயம் கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊழியர்களில் பலர், தங்களின் அதிகாரிகளால் 'அன்புடன்' கண்டிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக மாநில அரசின் சிப்பந்திகள் - ஊழியர்கள் நலச் சட்டத்தின்படி, வேலை நேரத்தில், ஊழியர்களின் பாதுகாப்பிற்கு முதலாளிகள்தான் பொறுப்பேற்க வேண்டும். ஹெச்.பி. நிறுவனத்தின் மீது கொலைக் குற்றம் சுமத்துவது வரம்பு மீறியது என்றாலும், குறைந்த பட்சம் இச்சட்டத்தின் படி அந்நிறுவனம் மீது ஒரு வழக்கு தொடர்ந்திருக்கலாம். ஆனால், கர்நாடக மாநில அரசோ, அப்படி வழக்குத் தொடர்ந்தால், தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்கள் பெங்களூரை விட்டு வெளியேறிவிடக் கூடும் என அச்சப்படுகிறதாம். ஊழியர்களின் உயிர் - பாதுகாப்பு - உரிமையைவிட ஆட்சியாளர்களுக்கு அந்நியச் செலாவணி முக்கியமானதல்லவா!

ஊழியர்களின் நலனையும், பாதுகாப்பையும் முதலாளிகளும், அரசும் உத்தரவாதம் செய்வார்கள் என எதிர்பார்ப்பது, ஓநாய் ஆட்டைப் பாதுகாக்கும் என நம்புவது போலத்தான் முடியும். கால் சென்டர் ஊழியர்கள், தொழிற்சங்கங்களை அமைத்துக் கொள்வதுதான் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உள்ள ஒரே வழி.

• மணி

www.padippakam.com

# இங்கேயும் ஒரு அபு-கிரைப்

## வீரப்பனைத் தேடுவது என்ற பெயரால் மலைவாழ் மக்களின் மீது அதிரடிப்படை ஏவிவிட்ட சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் சதாசிவம் கமிசனால் உறுதி செய்யப்பட்டுள்ளன.

சந்தனக் கடத்தல் வீரப்பன் கும்பலை வேட்டையாடுவதற்காக, தமிழக மற்றும் கர்நாடக மாநில அரசுகளால் உருவாக்கப்பட்ட சிறப்பு அதிரடிப் படைகள், சத்தியமங்கலம், தாளவாடி, கொள்ளேகால் பகுதிகளைச் சேர்ந்த மலைவாழ் மக்களின் மீது நடத்திய மனித உரிமை மீறல்களைப் புதிதாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. வீரப்பனைக் ''கொன்ற'' தமிழக அதிரடிப்படையின் ''வீர சாகசத்தை''ப் புகழ்ந்து தள்ளிய முதலாளித்துவ பத்திரிகைகளால்கூட, அதிரடிப் படைகளின் அட்டூழியங்களைப் பூசி மெழுகிவிட முடியவில்லை.

தமிழக - கர்நாடக அதிரடிப் படைகள் நடத்திய பாலியல் வன்முறைகள், சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்கள், இரத்த சாட்சிகளாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பவானி நகரைச் சேர்ந்த வழக்குரைஞர் ச.பாலமுருகன், அதிரடிப்படையால் நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்களின் வாழ்க்கை நிர்மூலமாக்கப்பட்டதை, ''சோளகர் தொட்டி'' என்ற நாவல் மூலம் இலக்கிய சாட்சியமாகப் பதிவு செய்திருக்கிறார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தேசிய மனித உரிமை கமிசனால் நியமிக்கப்பட்ட சதாசிவம் கமிசன், தமிழக-கர்நாடக அதிரடிப் படைகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்திய பொழுது, இந்த அதிரடிப் படைகள் மலைவாழ் மக்களின் மீது ஏவிவிட்ட சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், போலி மோதல் கொலைகள் அம்பலமாகி தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கின.

கர்நாடக உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சதாசிவா, மையப் புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் நரசிம்மன் ஆகியோரைக் கொண்டு 1999-ஆம் ஆண்டு ஜூனில் உருவாக்கப்பட்டது இந்த கமிசன். மலைவாழ் மக்களில் 193 பேர், தமிழக - கர்நாடக அதிரடிப் படைகளைச் சேர்ந்த 28 போலீசு அதிகாரிகள் உள்ளிட்டு 243 பேரிடம் விசாரணை நடத்தி, சதாசிவம் கமிசன் 2003-ஆம் ஆண்டு டிசம்பரில் தனது அறிக்கையை தேசிய மனித உரிமை கமிசனிடம் ஒப்படைத்தது.

இந்த கமிசன் உருவாக்கப்பட்டதையும், விசாரணை நடத்துவதையும் ஏற்றுக் கொள்ளவே மறுத்து வந்த தமிழக - கர்நாடக மாநில அரசுகள், வீரப்பனோடு சேர்த்து சதாசிவம் கமிசன் அறிக்கையையும் புதைத்துவிட கடந்த இரண்டு ஆண்டுகளாகவே முயன்று வந்தன. எனினும், அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களும், மனித உரிமை அமைப்புகளும் கமிசனின் அறிக்கையை வெளியிடக் கோரித் தொடர்ந்து போராடி வந்தனர். இதனால் மனுதாரர் என்ற அடிப்படையில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.பி.குணசேகரனுக்கு, சதாசிவம் கமிசன் அறிக்கை தேசிய மனித உரிமை கமிசனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

•••

''தமிழக - கர்நாடக அதிரடிப் படைகளால் அக்.3 1990-க்கும் ஜூலை 18, 1998-க்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டுகளில் 66 பேர் போலி மோதல் படுகொலைகள் மூலம் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும்; இந்தச் சட்ட விரோதமான படுகொலையை மறைக்க, வீரப்பன் கும்பலோடு நடந்த மோதலில் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தமிழக - கர்நாடக அதிரடிப் படைகள் நடத்திய நாடகத்தையும் கமிசனின் அறிக்கை தக்க ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியிருக்கிறது.

''அதிரடிப் படைக்கும், வீரப்பன் கும்பலுக்கும் இடையே நடந்ததாகக் கூறப்படும் இம்மோதல்களின் உண்மைத் தன்மை குறித்து, பல்வேறு சாட்சியங்கள் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை ஆதாரமற்றவை என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது'' எனக் குறிப்பிட்டுள்ள சதாசிவம் கமிசன், ''ஒரு மோதல் நடந்தால், அதில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பும், ஒருவரை நோக்கி ஒருவர், மிக விரைவாக, குறுக்கும் நெடுக்குமாகச் சுட்டுக் கொண்டிருப்பது நடந்திருக்கும். ஆனால் இந்த மோதல்களில் அப்படி இங்கொன்றும் அங்கொன்றுமாக, பல்வேறு திசைகளில் துப்பாக்கிச் சூடு நடந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை'' என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த 66 பேரும், தலையின் முன்புறமோ, பின்புறமோ அல்லது உடம்பின் முன்புறமோ, பின்புறமோ சுடப்பட்டு இறந்து போயிருப்பதை ஆதாரமாகக் காட்டி, இவை அனைத்தும் போலி மோதல் படுகொலைகள்தான் என்பதை சதாசிவம் கமிசன் ஆணித்தரமாக நிரூபித்துள்ளது.

பெங்களூரில் இயங்கி வரும் தடய அறிவியல் பரிசோதனைக் கூடத்தின் துணை இயக்குநர்

மைசூர் நகரில், ஏப்ரல் 2003-இல் சதாசிவம் கமிசன் நடத்திய இறுதி விசாரணைக் கூட்டம்.





படிப்பகம்

என்.ஜி.பிரபாகர், ''இந்த 66 பேரில், 28 பேர் ஆறு தப்படியில் இருந்து அறுநூறு தப்படி தூரத்திற்குள் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும்; மூன்று பேர் 550 மீட்டர் தொலைவிற்குள் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும்; ஆறு பேர் மிக மிக அருகாமையில் இருந்து - அதாவது, ஆறு தப்படிக்கும் குறைவான தொலைவில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும்'' சதாசிவம் கமிசனில் சாட்சியமாக அளித்து, அதிரடிப் படையின் மோதல் நாடகத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார்.



வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜாவின் உதவியுடன் பிரதமரைச் சந்தித்து, சதாசிவம் கமிசன் அறிக்கையை வெளியிடக் கோரிய மலைவாழ் இன மக்கள்.

மிக மிக அருகாமையில் இருந்து சுடப்பட்ட இந்த ஆறு பேரில், புட்டா என்பவர், வாய்க்குள் சுடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். குமத்ஸா என்பவரின் உடலில் பாய்ந்துள்ள ஒரு குண்டு, மூன்று இன்ஞ் தூரத்தில் இருந்தும், குஞ்சப்பா என்பவரின் உடலில் பாய்ந்துள்ள ஒரு குண்டு ஒன்பது இன்ஞ் தூரத்தில் இருந்தும் சுடப்பட்டுள்ளது. இவர்களைப் போல, வீரப்பனின் நம்பகமான கூட்டாளியாக இருந்த சேத்துக்குளி கோவிந்தனின் மனைவி பாப்பாத்தியும்; மணி என்ற மற்றொரு பெண்ணும் மிக அருகாமையில் இருந்து சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

''மோதலில் நடந்த மரணம் என்றால், இறந்தவர்களின் உடலில் துப்பாக்கி தோட்டாவின் புகைபடிய வாய்ப்பில்லை; ஆனால், இந்த 66 பேரின் உடலில் தோட்டாவின் புகை இருந்திருக்கிறது.''

''அதிரடிப்படை கூறும் ஒரு மோதல் மரணம், மாதேஸ்வரன் மலைப்பகுதியில் அதிகாலை 5.30 மணிக்கு நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அன்று காலை 7 மணிக்கே மைசூர் ஆர்.டி.ஓ. மோதல் நடந்த இடத்திற்கு வந்து விசாரணை நடத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது. மைசூரில் இருந்து மாதேஸ்வரன் மலை 140 கி.மீ தூரத்தில் உள்ளது. அதற்குள் ஆர்.டி.ஓ. அந்த இடத்திற்கு எப்படி வர முடியும்? எனவே, இந்த 'மோதலை' போலீசாரே உருவாக்கியுள்ளனர்.''

''மோதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இந்த 66 பேரின் நெருங்கிய உறவினர்கள் கூறியவற்றைப் பற்றித் தீர விசாரிக்காமல், ஒதுக்கித் தள்ளியிருப்பது ஒன்றே, அதிரடிப்படையின் நடவடிக்கைகள் மீது சந்தேகம் கொள்ள வைக்கிறது'' எனப் பல்வேறு கோணங்களில் இருந்து, அதிரடிப் படையின் மோதல் நாடகத்தை சதாசிவம் கமிசன் அம்பலப்படுத்தியிருக்கிறது.

''ராஜேந்திரன் என்பவரது மனைவி லட்சுமியைச் சட்டவிரோதமாகக் காவலில் வைத்து, அவரை அதிரடிப்படை பாலியல் பலாத்காரப்படுத்தியிருக்கிறது. இவரைப் போல பல பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டு, பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பல பெண்களின் உடம்பில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய பாலியல் வன்முறை, மின்சாரத் தாக்குதலால் ஏழு பெண்கள் நிரந்தர ஊனமடைந்துள்ளர். ராஜப்பா என்பவரது மனைவியை வயதான பெண் என்றும் பாராமல் 4 அதிரடிப் படை போலீசார் அடித்தே கொன்றுள்ளனர். விசாரணை என்ற பெயரில் கூட்டிச் செல்லப்பட்ட பெண்களில் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர்'' என அப்பாவி மலைவாழ் பெண்களின் மீது ஏவிவிடப்பட்ட சித்திரவதைகளும், அதிரடிப்படையின் காமவெறியும், களியாட்டங்களும் அறிக்கையில் பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளன.

''ஒர்க்-ஷாப்'' என்று அழைக்கப்பட்ட அதிரடிப்படையின் மாதேஸ்வரன் மலை முகாம் சட்டவிரோதமான சிறையாகவும், சித்திரவதைக் கூடமாகவும் செயல்பட்டு வந்ததையும் சதாசிவம் கமிசன் அம்பலப்படுத்தியிருக்கிறது. ''அப்பாவி மலைவாழ் மக்கள் பலரை தடா வழக்கில் சேர்ப்பதற்கு முன்பாக, இந்த ஒர்க்-ஷாப்பில் சட்டவிரோதமாக அடைத்து வைத்து ஆண்-பெண் என்ற வேறுபாடின்றி, அவர்களின் உடம்பிலும், பிறப்புறுக்களிலும் கிளிப்புகளைப் பொருத்தி மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்யப்பட்டிருப்பதை கமிசனின் அறிக்கை உறுதி செய்திருக்கிறது.

''தமிழக மற்றும் கர்நாடக மாநில அரசுகளால் உருவாக்கப்பட்ட அதிரடிப் படைகள் என்பது ஆயுதப் படைப் பிரிவு போன்றதுதான். அப்படைகளுக்கு போலீசு நிலையம் போலச் செயல்படக் கூடிய அதிகாரம் கிடையாது. அதாவது, அதிரடிப் படைக்கு யாரையும் கைது செய்யவும், காவலில் அடைத்து வைக்கவும் அதிகாரம் இல்லாதபொழுது, அப்படைகள் தங்களின் அதிகார எல்லைகளை மீறிச் சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ளன'' என சதாசிவம் கமிசன் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இச்சட்டவிரோதக் காவல், கைது குறித்த கமிசனின் குற்றச்சாட்டுகளுக்கு, தமிழகப் போலீசு துறையின் இயக்குநர் மற்றும் அதிரடிப் படைகளின் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் தேவாரம், ''தனக்கு நாடு முழுவதும் யாரையும் கைது செய்யும் அதிகாரம் உண்டு; அதனால் தனக்குக் கீழ் பணியாற்றும் அதிரடிப் படைக்கும் கைது செய்யும் அதிகாரம் உண்டு'' எனப் பதில் அளித்தார். ஆனால், கமிசன் தேவாரத்தின் ''வானளாவிய அதிகாரம்'' குறித்த இந்தப் பதிலை ''சட்டரீதியாகச் செல்லத்தக்கதல்ல'' எனக் கூறி, ஒதுக்கித் தள்ளிவிட்டது.

வீரப்பனைத் தேடிப் பிடிக்க முடியாத அதிரடிப் படை, 121 பேரை வீரப்பன் கூட்டாளிகள் என்ற குற்றச்சாட்டின் கீழ் ''தடா''வில் கைது செய்து, மைசூர் சிறையில் அடைத்தது. ''போலீசின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு முன்னரே இவர்கள் கைது செய்யப்பட்டு, சட்டவிரோதக் காவலில் அடைக்கப்பட்டு, அருவெறுக்கத்தக்க வகையில், மிருகத்தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். தங்களின் சட்டவிரோதமான கைதை நியாயப்படுத்துவதற்காகவே, இவர்களைப் பொய் குற்றச்சாட்டின் கீழ் தடாவில்

www.padippakam.com



**சதாசிவம் கமிசன் அறிக்கையை வெளியிடக் கோரி, செப்டம்பர் மாதம் மேட்டூர் நகரில் மனித உரிமை அமைப்பினர் நடத்திய மனிதச் சங்கிலி போராட்டம்.**

கைது செய்துள்ளனர்'' என சதாசிவம் கமிசன் குறிப்பிட்டுள்ளது.

மேலும், ''தடாவின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 121 பேரில், 38 பேரின் வழக்குகளை மாநில அரசின் தடா மறு ஆய்வு கமிட்டி முறைப்படி தீர விசாரித்திருந்தால், அந்த 38 பேரும் நீண்டகாலம் சிறையில் இருந்திருக்க வேண்டியிருக்காது'' எனச் சுட்டிக் காட்டியுள்ள சதாசிவம் கமிசன், ''செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவித்த இந்த 38 பேருக்கும் உரிய நட்டஈடு வழங்க வேண்டும்'' என்றும் பரிந்துரை செய்துள்ளது.

அதிரடிப் படையால் ''தடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட 121 பேரில், 14 பேர் தவிர மீதி அனைவரும் எவ்வித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுள் 46 பேரின் மீது தடாவை ஏவியதற்கு, அவர்கள் அதிரடிப்படையிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர, வேறு எந்த ஆதாரத்தையும் போலீசால் காட்ட முடியவில்லை. இந்த ஒப்புதல் வாக்குமூலம் கூட நம்பத்தகுந்ததாக இல்லை என்பதை சதாசிவம் கமிசன் மட்டுமல்ல, இவர்களை விடுதலை செய்த தடா நீதிமன்றமும் சுட்டிக் காட்டியுள்ளது.

•••

பல ஆண்டுகளுக்கு முன் போலீசின் அத்துமீறல்களை விசாரித்த ஒரு நீதிமன்றம் ''போலீசார் காக்கிச் சட்டை போட்ட கிரிமினல்கள்'' எனத் தீர்ப்பளித்தது. அது மறுக்க முடியாத உண்மை என்பது சதாசிவம் கமிசன் விசாரணையில் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

அதிரடிப்படை வீரர்களைத் தூண்டிவிட்டு சதாசிவம் கமிசன் நியமிக்கப்பட்டதையே எதிர்த்து வழக்குப் போட வைத்த கர்நாடக மாநில அரசு, ''அதிரடிப்படை நடத்திய மோதல்கள் போலியானவை என்று கூற போதிய ஆதாரம் இல்லை; தடய அறிவியல் பரிசோதனைக் கூட துணை இயக்குநர் பிரபகாரன் சாட்சியம் அளிக்க, எந்தவொரு சமயத்திலும் அழைக்கப்படவேயில்லை'' எனக் கூறி சதாசிவம் கமிசன் அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது.

பாசிச ஜெயா தலைமையில் உள்ள தமிழக அரசோ, ''சதாசிவம் கமிசன் குறிப்பிடும் அத்துமீறல்கள் 1993-94-ஆம் ஆண்டில் நடந்தவை; சட்டப்படி இந்த அத்துமீறல்களை, அவை நடந்த ஒரு வருடத்திற்குள் விசாரித்திருக்க வேண்டும்; ஆனால் சதாசிவம் கமிசனோ 1999-ஆம் ஆண்டில்தான் விசாரணையை நடத்தியது. எனவே, கமிசனின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது'' எனச் சட்டவாதத்திற்குள் புகுந்து தப்பித்துக் கொள்ள முயலுகிறது.

ஈராக்கின் அபு-கிரைப் சிறைச்சாலையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அமெரிக்கச் சிப்பாய்களில் ஒரு சிலர் தவிர்க்க முடியாமல் தண்டிக்கப்பட்டு உள்ளனர். ஆனால், அபு-கிரைப்புக்கு இணையாக மலைவாழ் மக்களின் மீது சித்திரவதைகளை ஏவிவிட்ட அதிரடிப்படை வீரர்களுள் ஒருவர் கூடத் தண்டிக்கப்படாமல், அரசாலேயே காப்பாற்றப்படுகின்றனர். அது மட்டுமின்றி, தமிழக - கர்நாடக மாநில அரசுகள், அதிரடிப் படைக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வெகுமதிகளை அளித்து, காக்கிச் சட்டை கிரிமினல்களுக்குக் கொம்பு சீவி விடுகின்றன. அரசு பயங்கரவாதம் என்ற சட்டபூர்வ பாசிசம் அரங்கேறி வருவதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

சதாசிவம் கமிசன் கூட, தன்னிடம் சாட்சியம் அளித்த 243 பேரின் வாக்குமூலங்களில், 89 பேரின் வாக்குமூலங்களைத்தான் ஏற்றுக் கொண்டுள்ளது. மீதியுள்ளவர்களின் வாக்குமூலங்களை ஏற்றுக் கொள்வதோடு, போலீசாரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி கமிசன் முன் சாட்சியம் அளிக்க வர முடியாமல் போனவர்களின் வாக்குமூலங்களையும் சேகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுது மலைவாழ் மக்களின் வாழ்வுரிமைக்காகப் போராடிவரும் அமைப்புகளால் முன்வைக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருந்த சதாசிவம் கமிசன் அறிக்கையை, மலைவாழ் மக்கள், மனித உரிமை அமைப்புகள், ஜனநாயக சக்திகளின் தொடர்ச்சியான போராட்டம்தான் வெளி உலகிற்குக் கொண்டு வந்தது. இப்படிப்பட்ட மக்கள்திரள் போராட்டங்களை நடத்துவதன் மூலம் மட்டும்தான், அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியும், நட்டஈடும் கிடைக்கவும்; தேவாரம் உள்ளிட்ட அதிரடிப்படை கிரிமினல்களைத் தண்டிப்பதற்கான நிலைமையையும் உருவாக்க முடியும்.

**• ரஹீம்**

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு....

*• பணவிடை (M.O.) மூலம் தொகை அனுப்பும் சந்தாதாரர்கள், பணவிடைப் படிவத்தின் அடிப் பகுதியில் - தகவலுக்கான இடத்தில் தமது பெயர், முகவரியை* **அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் தெளிவாக** *எழுதி அனுப்பவும்.*

*• சந்தாக்களை பிரதிமாதம் 23-ஆம் தேதிக்குள் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பவும். தாமதமாகக் கிடைக்கும் சந்தாக்களுக்கு 1-ஆம் தேதியன்று இதழை அனுப்ப இயலாது. அதற்கடுத்த இதழிலிருந்தே அனுப்பப்படும்.*

*— நிர்வாகி.*


படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

● சாதிய ஆதிக்கத்தைத் தகர்ப்பதே தமது லட்சியம் என்று புறப்பட்ட திருமா, இன்று ஆதிக்கசாதி பிழைப்புவாத அரசியல்வாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு வலம் வருவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான துரோகமும் அரசியல் பித்தலாட்டமும் பிழைப்புவாதமுமாகும்.

**– ச. மதியழகன், ஊற்றங்கரை.**

● நக்சல்பாரிகளின் சிறைதகர்ப்பு நிகழ்ச்சியானது, வெறும் சாகசவாத நடவடிக்கை அல்ல என்பதையும் இருண்ட பீகாரில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சிய எழுச்சி என்பதையும் பு.ஜ. கட்டுரை எடுப்பாக உணர்த்தியுள்ளது.

**– அஜிதா, திருப்பூர்.**

● திரைப்படங்களில் ஒரே நடிகர் கதாநாயகனாகவும், வில்லனாகவும் இரட்டை வேடங்களில் நடிப்பதைப் போல, சி.பி.எம். கட்சியும் ஒருபுறம் மே.வங்கத்தில் அமெரிக்கப் போர்விமானப் பயிற்சிக்கு அனுமதித்து விட்டு, மறுபுறம் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டமும் நடத்தி இரட்டை வேடமிட்டு நடிக்கிறது. இரட்டை வேடம் போடும் இவர்கள் ஒருகாலும் கம்யூனிஸ்டுகளாக இருக்க முடியாது.

**– செம்மலர் மா.நடராசன், அறந்தாங்கி.**

● பு.ஜ. கட்டுரைகளில் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களைக் கையாண்டு மொழியுணர்ச்சியை வெளிப்படுத்தி வருவது சிறப்பு. எழுத்துப் பிழைகள் நேர்வது இயற்கை எனினும், அவை நேராதிருக்க உரிய கவனம் செலுத்துங்கள். ராமன்குட்டி மணியப்பன் கொலை விவகாரம் குறித்த பிரச்சினையில், இந்திய அரசு அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணை போவதன் விளைவுதான் இப்படுகொலை என்று விளக்கியதானது, பு.ஜ.வின் அரசியல் நேர்மையையும் துணிச்சலையும் காட்டுகிறது. என்னைப் போன்ற தலித் இளைஞர்களுக்கு திருமா, வெறுமாதான்! நக்சல்பாரிகளுக்குச் சோறு போட்டது, தலித்துகள்தான் என்று கூறிவரும் ரவிக்குமார் - திருமாக்களே, உங்களது பிழைப்புவாத அரசியல் பித்தலாட்டங்களை தலித் மக்கள் புரிந்து கொள்ளும் போது, உங்களுக்குச் சோறு போடும் தலித் மக்களே உங்களை விரட்டுவது உறுதி!

**– மணிகோ. பன்னீர்செல்வம், நாகம்பட்டி.**

● ஆண்டாண்டு காலமாக வஞ்சிக்கப்பட்ட தலித் மக்களுக்கு ஆறாத ரணத்தை ஏற்படுத்திய ஆதிக்க சாதி வெறியர்களோடு கூட்டணி கட்டிக் கொள்ளும் திருமாக்களின் பிழைப்புவாதப் பித்தலாட்டங்களை, இனியும் தாழ்த்தப்பட்ட மக்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள். இத்துரோகத் தலைமைக்கு அடங்க மறுப்பார்கள்; அத்துமீறுவார்கள்.

**– ப. தர்மராசு, திருச்சி.**

● நிலப்பிரபுக்களாலும் ரன்வீர்சேனா குண்டர்படையாலும் காலங்காலமாக நசுக்கப்பட்டு வந்த உழைக்கும் மக்கள், நக்சல்பாரிகளின் தலைமையில் திரண்டு பீகாரில் சிறையைத் தகர்த்த செயலானது, இந்தியப் புரட்சிகர வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும். பத்திரிகைகள் பயங்கரவாதமெனப் பீதியூட்டிய நிலையில், உண்மைநிலைமைகளை வெளிக்கொணர்ந்த பு.ஜ. கட்டுரை புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

**– வில்லவன், தாதகாப்பட்டி.**

● தலித் மக்களை ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்க வந்த இரட்சகனாகவும் புரட்சியாளனாகவும் விளம்பரப்படுத்திக் கொண்ட "தொல். திருமா", இப்போது ஆதிக்க சாதிவெறியர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு தேர்தல் சாக்கடையில் மூழ்கி "தொலைந்து போன திருமா"வாகிவிட்ட உண்மைக் கதையை படம் பிடித்துக் காட்டியது சிறப்பு.

**– இனியவன், மூணாங்கரடு**

● தென்னமெரிக்கக் கண்டத்தில் புஷ் எதிர்ப்புப் போராட்டம் பற்றிய செய்தியில், உலக சமூக மன்ற (WSF) த்தின் துரோகத்தனத்தையும் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும். போராட்டம் நியாயமானது எனினும் உலக சமூக மன்றத்தின் சதிகாரத் தலைமையைத் தோலுரித்துக் காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

**– தமிழரசன், தஞ்சை.**

● பீகார் சிறை தகர்ப்பு பற்றி பு.ஜ. மட்டுமே பீகாரில் தாழ்த்தப்பட்டோர் அனுபவித்துவரும் கொடுமைகளையும், சாதிவெறியர்களின் கொலை வெறியாட்டங்களையும், புரட்சிகர சக்திகள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளையும் எடுப்பாக விளக்கியுள்ளது. அடக்குமுறையாளர்களைக் குலைநடுங்கச் செய்யும் நக்சல்பாரி புரட்சிகர இயக்கம் மென்மேலும் வளர்ந்தோங்க விழைகிறேன்.

**– ஜீவா, சென்னை.**

● தாராளமயக் கொள்கை நடைமுறைக்கு வந்த பிறகு, அத்தியாவசியத் தேவைகளுக்காக மாதம் ரூ. 225 கூடச் செலவிட முடியாத வறுமையில், விவசாயிகள் கொத்துக் கொத்தாகத் தற்கொலை செய்து கொள்ளுவதை அறிந்து அதிர்ச்சியடைந்தேன். நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் தாராளமயமாக்கலை எதிர்த்துப் போராடத் தொடங்கிவிட்டால், இக்கேடு கெட்ட கொள்கை அவர்களது ஏர்-கலப்பையால் கிழித்தெறியப்பட்டு மண்ணில் புதைக்கப்படுவது நிச்சயம்!

**– நிர்மலா, திருச்சி.**

● இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் மரணக் குழியில் தள்ளிவரும் தாராளமயக் கொள்கையை எதிர்த்துப் போராட, விவசாயிகள் முதலில் ஓட்டுப் பொறுக்கிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற உண்மையை பு.ஜ. கட்டுரை எடுப்பாக விளக்கியுள்ளது. செங்கொடி ஏந்த அருகதையற்ற புரட்டல்வாதிகளான சி.பி.எம். கட்சியினரை தொடர்ந்து அம்பலப்படுத்தி வருவது சிறப்பு.

**– செங்கொடியவன், சேலம்.**

● மேட்டுக்குடிக்கும், ஊசலாடும் உயர் நடுத்தர வர்க்கத்துக்கும் பூலோக சொர்க்கமாகத் தெரியும் தனியார்மய - தாராளமயக் கொள்கையின் கொலைகார முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது அட்டைப் படக் கட்டுரை. புரட்சியாளர்கள் இன்னும் துரிதமாகப் பணியாற்ற வேண்டிய அவசியத்தை பு.ஜ. உணர்த்தி வருகிறது.

**– பனிமலர், சென்னை.**

● ஜனநாயகம் பற்றி வாய்கிழியப் பேசும் ஏகாதிபத்தியவாதிகள், தமது சொந்த நாட்டில் நிறவெறி பாசிஸ்டுகளாக இருப்பதை அம்பலப்படுத்திக் காட்டுவதாக பாரீஸ் கலகம் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது. ராமன்குட்டி மணியப்பன் கொலையில், குற்றவாளி இந்திய அரசுதான் என்பதை வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டி தொகுத்துக் கூறியது சிறப்பு.

**– புரட்சித்தூயன், தருமபுரி.**

● கடைசிப் பக்க அட்டைப்படச் செய்தி, ஈராக் மக்களின் துயரத்தை கண்ணீரில் எழுதப்பட்டதாக, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் மீது ஆத்திரம் கொள்ளத்தக்கதாக அமைந்திருந்தது. விவசாயிகளைக் காவு கொள்ளும் தாராளமயக் கொள்கை பற்றிய கட்டுரை எளிய நடையில் சிறப்பாக உள்ளது. தமிழக விவசாயிகளின் அவலம் பற்றியும் ஒப்பந்த விசாயம் பற்றியும் இதில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

**– வாசகர் வட்டம், வேலூர்.**

● தலையங்கக் கட்டுரையானது, வெள்ளத்துக்குக் காரணமான ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தி, மறுவாழ்வுக்காகப் போராட அறைகூவுவதாக உரிய தருணத்தில் வெளிவந்துள்ளது. தனியார்மய - தாராளமயக் கொள்கையால் விவசாயமும் விவசாயிகளும் நாசமாக்கப்பட்டு வருவதை அட்டைப் படக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது.

**– வாசகர் வட்டம், திருச்சி.**

● கொள்கை - லட்சியங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு தனிநபர் துதி, பிழைப்புவாத புதைசேற்றில் புரளும் திருமாவின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியிருப்பது சிறப்பு.

**– சுரேஷ்குமார், சென்னை.**

● பு.ஜ. இல்லையேல், சி.பி.எம். கட்சியின் சந்தர்ப்பவாதத்தையும் அமெரிக்க எதிர்ப்பு பித்தலாட்டத்தையும் தமிழக மக்கள் அறிய முடியாமல் போயிருக்கும். துரோகிகளைத் தோலுரிக்கும் உங்கள் பணி தொடரட்டும்.

**– கதிரவன், சென்னை.**



படிப்பகம்

www.padippakam.com

## உலக வர்த்தகக் கழக(W.T.O.)த்தின் ஹாங்காங் ஒப்பந்தம்:

# மறுகாலனியாதிக்கத்தின் பிடி இறுகுகிறது

தனியார்மயம் - தாராளமயத்தின் மூலம் இந்திய விவசாயமும், சிறுதொழிற்துறையும், வங்கி, காப்பீடு, கல்வி போன்ற சேவைத்துறையும் பன்னாட்டு நிறுவனங்களின் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுவது, தங்கு தடையின்றி நடந்து வருகிறது. இந்தியா மட்டுமின்றி, இந்தியா போன்ற ஏழை நாடுகள் அனைத்திலும் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் இந்த மாற்றங்கள்தான் திணிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில், ஏழை நாடுகளின் இம்மூன்று துறைகளையும் ஒரே அடியில், முற்றிலுமாகத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர, ஏகாதிபத்திய நாடுகள் உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் முயன்று வருகின்றன.

கத்தார் நாட்டில் உள்ள தோஹா நகரில் 2001-ஆம் ஆண்டு நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் நான்காவது அமைச்சர்கள் மாநாடு தொடங்கியே, இத்துறைகள் குறித்து உலக வர்த்தகக் கழகத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர, ஏகாதிபத்திய நாடுகள் ஏழை நாடுகளுக்கு நிர்பந்தம் கொடுத்து வருகின்றன. ஏழை நாடுகளின் ஆளும் கும்பலுக்குச் சில சலுகைகளைக் கொடுப்பதன் மூலம், உடன்பாட்டைச் சாதித்து விட ஏகாதிபத்திய நாடுகள் முயன்று வருகின்றன. இந்தச் சதித் திட்டத்திற்கு உலக வர்த்தகக் கழகம் சூட்டியுள்ள பெயர்தான் ''தோஹா வளர்ச்சி சுற்று பேச்சு வார்த்தை!''

இந்த நோக்கத்தை மையமாக வைத்து, மெக்சிகோ நாட்டில் உள்ள கான்கன் நகரில் 2003-ஆம் ஆண்டு உலக வர்த்தகக் கழகத்தின் ஐந்தாவது அமைச்சர்கள் மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டிற்கு எதிராக உலகு தழுவிய அளவில் எழுந்த எதிர்ப்பாலும்; ஏழை நாடுகளைப் பிரித்தாளும் ஏகாதிபத்திய நாடுகளின் சதி வெற்றி பெற முடியாமல் போனதாலும்; ஏழை நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் எதிர்பார்த்த சலுகைகள், ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து கிடைக்காததாலும் இந்த ஐந்தாவது மாநாடு தோல்வியில் முடிந்தது.

இதன்பின், 2004 ஜூலையில் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் கூட்டத்தில் ''தோஹா வளர்ச்சி சுற்றுப் பேச்சுவார்த்தைகள்'' குறித்து, ஏகாதிபத்திய நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையே ஓர் சமரச உடன்படிக்கை ஏற்பட்டது.

இதன்படி, அரசாங்கம் நடத்தும் ஏலங்களில் பன்னாட்டு நிறுவனங்களும் உள்நாட்டு நிறுவனங்களைப் போல கலந்து கொள்ளும்படி, ஏழை நாடுகளின் அரசாங்கக் கொள்முதல் கொள்கையை மாற்றியமைப்பது;

ஏழை நாடுகளின் எந்தத் தொழிலிலும் பன்னாட்டு நிறுவனங்கள் 100 சதவீதம் மூலதனம் போடுவதற்கு முழுச் சுதந்திரம் அளிப்பது;

ஏழை நாடுகளின் தொழிற் போட்டி சட்டத்தை மாற்றியமைப்பது - ஆகிய அம்சங்களைப் பேச்சு வார்த்தையில் இருந்து விலக்கிக் கொள்வது என்றும்; விவசாயம், தொழிற்துறை காப்பு வரிகள், சேவைத் தொழில் குறித்து மட்டும் பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இச்சமரச ஏற்பாட்டின் பின், ஹாங்காங் நகரில் டிசம்பரில் மாதம் இரண்டாவது வாரம் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் ஆறாவது அமைச்சர்கள் மாநாட்டில், இந்த அம்சங்கள் குறித்து அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

- அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும் தங்களின் வேளாண் பொருட்களுக்குக் கொடுத்து வரும் ஏற்றுமதி மானியத்தை 2013-ஆம் ஆண்டோடு நிறுத்திவிட வேண்டும்.

- வேளாண் பொருட்கள் ஏழை நாடுகளில் அளவுக்கு அதிகமாக இறக்குமதியாகும் பொழுது, அல்லது அந்நாடுகளின் வேளாண் பொருட்களின் விலை வீழ்ச்சியடையும் பொழுது, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள், வேளாண் பொருட்கள் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வையை உயர்த்திக் கொள்ளலாம்.

- தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகள், தீர்வைகளைக் குறைப்பதில் ஏழை நாடுகளுக்குச் சலுகைகள் வழங்கப்படும். குறிப்பாக, குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்களை, தீர்வை குறைப்பு வட்டத்துக்குள் கொண்டு வராமல் இருக்கும் சலுகை ஏழை நாடுகளுக்கு வழங்கப்படும்.

- இவற்றை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து அடுத்த ஆண்டிற்குள் முடிவு எடுக்கப்படும். தாவர வகைகள், நுண்ணுயிர்களின் மீது காப்புரிமை கோருவது; சேவைத் தொழிலைத் தாராளமயமாக்குவது குறித்து ஏழை நாடுகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என இந்த ஹாங்காங் அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

•••

**ஹாங்காங் ஒப்பந்த நகலைக் காட்டி, அதன் அருமை பெருமைகளை ஹாங்காங்கில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் விளக்கும் இந்திய வர்த்தக - தொழில்துறை அமைச்சர் கமல்நாத்.**






படிப்பகம்

www.padippakam.com

**ஹா**ங்காங் அறிக்கை . உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள 149 உறுப்பு நாடுகளாலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட தாகக் கூறப்படுகி றது. இந்த அறிக்கை தொடர்பாக உலக வர்த்தகக் கழகத்தில் நடந்த விவாதங்க ளைக் காட்டி, உலக வர்த்தகக் கழகத்தை ஜனநாயக அமைப் பாகச் சிங்காரிக்கி றார்கள். ஆனால், ஏகாதிபத்திய நாடு கள் விவசாயத்திற் குக் கொடுத்துவ ரும் ஏற்றுமதி மானி யத்தை 2010-ஆம் ஆண்டோடு நிறுத் திக் கொள்ள வேண் டும் என்ற ஏழை நாடுகளின் சாதா ரண கோரிக்கையைக்கூட ஏகாதிபத் திய நாடுகள் விவாதத்தின் பொழுது ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.



உலக வர்த்தகக் கழகத்தில் விவசாயம் சேர்க்கப்படுவதை எதிர்த்து, ஹாங்காங்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

ஐரோப்பிய யூனியன், தனது பொது விவசாயக் கொள்கையை 2013-ஆம் ஆண்டில் பரிசீலிக்கும் வரை, மானியக் குறைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவித்திருந் தது. அமெரிக்கா, 2008 தொடங்கி 2013-க்குள் தனது ஏற்றுமதி மானியத் தில் 53 சதவீதத்தைக் குறைத்துக் கொள் வதாக, ''உலக வேளாண் வணிகத்தில் துணிச்சலான சீர்திருத்தங்கள்'' என்ற திட்டத்தில் அறிவித்திருந்தது. இதன்ப டிதான், ஏற்றுமதி மானியத்தை நிறுத் திக் கொள்ளும் இலக்காக 2013-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கி றது.

ஐரோப்பிய யூனியன், கடந்த 2002-03-ஆம் ஆண்டில் மட்டும் தனது நாடுகளைச் சேர்ந்த விவசாயிக ளுக்கும், விவசாய கம்பெனிகளுக்கும் கொடுத்துள்ள மொத்த மானியம் 3,60,000 கோடி ரூபாய். இதில், ஏற்றும திக்காக கொடுக்கப்பட்ட மானியம் 15,750 கோடி ரூபாய்தான். அமெரிக் காவும், ஐரோப்பிய யூனியனும் விவ சாயத்திற்குக் கொடுத்துவரும் பல் வேறு விதமான மானியங்களில், 5 சத வீதம் கூடப் பெறாத இந்த ஏற்றுமதி மானியத்தை மட்டும்தான், 2013-ஆம் ஆண்டில் நிறுத்திக் கொள்வதாக வாக் குறுதி கொடுத்துள்ளன. மலையைக் கிள்ளி எலியைப் பிடித்த கதையாக, இந்த அற்பமான சலுகைதான் உலக வர்த்தக கழகத்தைச் சேர்ந்த 125 ஏழை நாடுகளுக்குக் கிடைத்திருக்கிறது.

அமெரிக்கா, தனது நாட்டு பருத்தி விவசாயிகளுக்குக் கொடுத்துவரும் மானியத்தை மட்டும் 2008-ஆம் ஆண்டு முதல் நிறுத்திக் கொள்வதாக, இம்மாநாட்டில் டாம்பீகமாக அறிவித் திருக்கிறது. அமெரிக்காவின் இந்தப் ''பெரிய மனதால்'' பலன் அடையப் போவது நான்கே நான்கு மேற்கு ஆப்பி ரிக்க நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதி வணிகர்கள்தான்.

இது ஒருபுறமிருக்க, உலக வர்த்த கக் கழகத்தில் எவ்வளவுதான் சலுகை கள் வழங்கப்பட்டாலும், 40 மிகவும் வறிய ஏழை நாடுகளுக்கு, எந்தவொரு பலனும் கிட்டப் போவதில்லை என உலக வங்கியே வெளிப்படையாகக் கூறியிருக்கிறது.

உண்மை இப்படியிருக்க, தாராளம யத்தின் ஆதரவாளர்களோ, இந்த மாநாட்டு அறிக்கை ஏழை நாடுகளின் விவசாயிகளுக்கு சொர்க்க வாச லையே திறந்து விட்டதைப் போலப் பீற்றிக் கொள்கிறார்கள். ''சமனற்ற போட்டியை எதிர்கொள்ள வேண்டியி ருந்த கட்டாயத்தில் இருந்து இந்திய விவசாயிகள் தப் பித்து விட்டதாக வும்; அவர்கள் ஏற் றுமதி செய்வதற் குப் புதிய சந்தை கள் கிடைத்திருப்ப தாகவும்'' இந்திய அரசு குறிப்பிட் டுள்ளது.

தாராளமயத்திற் குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் தற் கொலை செய்து கொண்ட விவசாயி கள், அமெரிக்கா விற்கும், ஐரோப்பா விற்கும் ஏற்றுமதி செய்ய முடியவில் லையே என்று கவ லைப்பட்டா பூச்சி மருந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்கள்? ஒரிசாவையும், மகா ராஷ்டிராவையும் சேர்ந்த பழங்குடி இன மக்களும், அவர் களின் குழந்தைகளும் ஒருவேளை சோறுகூடக் கிடைக்காமல் பட்டினி யால் செத்த பொழுது, அவர்களுக்கு ரேசன் அரிசியை இலவசமாகத் தர மறுத்தது, மைய அரசு. அதேசமயம் வெளிநாடுகளுக்கு மானிய விலையில் அரிசியையும் கோதுமையையும் ஏற்று மதி செய்தது. அந்நியச் செலாவணிக் காக நடந்த அந்த வியாபாரத்தை நியா யப்படுத்துபவர்களால் மட்டுமே, ஹாங்காங் அறிக்கையைக் கொண் டாட முடியும்.

தாராளமயத்தின் பின் விவசாயத் தில் நுழைந்துள்ள ஐ.டி.சி. போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்கள்; ஏற்றுமதிக்காகவே விவசாயம் செய் யும் புதுப்பணக்கார விவசாயிகள் - இவர்களுக்குத்தான் ஹாங்காங் அறிக்கை இலாபகரமானதாக இருக்கு மேயொழிய, கந்துவட்டிக்காரனிடம் கடன்பட்டு விவசாயம் செய்யும் சிறிய - நடுத்தர விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பலனும் கிட்டப் போவதில்லை.

உலக வங்கியின் கட்டளைப்படி, கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஒவ் வொரு பட்ஜெட்டிலும், விவசாயத் திற்கு வழங்கப்படும் மானியம் படிப்ப டியாக வெட்டப்பட்டு, ஏதோ பெயரள விற்குத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. விவசாய மானியம் என்பதே கழுதை

www.padippakam.com

தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்ட நிலையில், அதில் இனியும் வெட்டுவதற்கு மிச்சம் எதுவும் கிடையாது. இப்படிப்பட்ட நிலையில்தான், இதுவரை மானியத்தை வெட்ட மறுத்துவந்த அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் 2013-இல் ஏற்றுமதி மானியத்தை நிறுத்தும்பொழுது, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் மானியத்தைக் குறைக்க வேண்டியதில்லை என்ற ''சலுகை'' வாரி வழங்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பே, இறக்குமதிக்கு இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, 1,429 வேளாண் பொருட்களை, எங்கிருந்து வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற ''சீர்திருத்தம்'' நம்நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தத் தாராள இறக்குமதி, ரப்பர், தேயிலை, காபி, பருத்தி, தென்னை, எண்ணெய் வித்துக்கள், பழங்கள், பால் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பல இலட்சக்கணக்கான விவசாயிகளைப் போண்டியாக்கி, அவர்களை விவசாயம் செய்ய முடியாமல் முடக்கிப் போட்டு விட்டது.

விவசாயத்திற்கு அடுத்து மிகப் பெரும் வேலைவாய்ப்புகளை வழங்கி வந்த சிறு தொழிற்துறைக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளும், பாதுகாப்பும் தாராளமயத்தின் பின் நீக்கப்பட்டதால், இந்தியாவெங்கும் பல இலட்சக்கணக்கான சிறு தொழில்கள் மூடிக் கிடக்கின்றன. இப்படி விவசாயமும், சிறு தொழில் துறையும் அரசால் கைவிடப்பட்டு, அழிக்கப்பட்ட பிறகு, தாராள இறக்குமதியில் இருந்து இத்தொழில்களைப் பாதுகாக்க உலக வர்த்தகக் கழகத்தால் சலுகைகள் வழங்கப்படுவது குரூர நகைச்சுவையாகத்தான் இருக்க முடியும்!

அதனால்தான், இந்த மாநாட்டை எதிர்த்து ஹாங்காங் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட விவசாயிகளும், உழைக்கும் மக்களும், ''உலக வர்த்தகக் கழகம், மரணத்தை ஏற்படுத்தக் கூடிய பறவைக் காய்ச்சலைவிட மிகவும் அபாயகரமானது'' என முழக்கமிட்டார்கள்.

வெறும் மூங்கில் கழிகளைக் கொண்டு ஹாங்காங் போலீசாரோடு மோதிய தென்கொரிய நாட்டைச் சேர்ந்த விவசாயி ஒருவர், ''நாங்கள் தீவிரவாதிகள் கிடையாது. எங்களின் வாழ்க்கை எப்படிச் சீரழிந்து போய் விட்டது என்பதைக் காட்டுவதற்காகவே இங்கே வந்திருக்கிறோம்'' என்றார்.




**ஹாங்காங் நகரத் தெருக்களில் உலக வர்த்தகக் கழகத்தை எதிர்த்துப் போராடிய விவசாயிகள், சலுகைகள் கேட்டோ, அமெரிக்க, ஐரோப்பிய சந்தைகளைத் திறந்துவிடக் கோரியோ போராடவில்லை. ''உலக வர்த்தகக் கழகம், மரணத்தை ஏற்படுத்தக் கூடிய பறவைக் காய்ச்சலைவிட மிகவும் அபாயகரமானது'' என்றுதான் முழக்கமிட்டார்கள்.**

ஹாங்காங் நகரத் தெருக்களில் உலக வர்த்தகக் கழகத்தை எதிர்த்துப் போராடிய விவசாயிகள், சலுகைகள் கேட்டோ, அமெரிக்க, ஐரோப்பிய சந்தைகளைத் திறந்துவிடக் கோரியோ போராடவில்லை. மாறாக, ஒரு மோசமான ஒப்பந்தத்தைவிட, ஒப்பந்தம் போடாமல் கலைவதே மேலானது என்று தான் அவர்கள் கோரினார்கள்.

•••

''தோஹா வளர்ச்சி சுற்றுப் பேச்சு வார்த்தையின் தலையெழுத்து முடிந்து விட்டது'' எனக் கை கழுவி விடப்பட்ட நிலையில், அதற்கு ஹாங்காங் ஒப்பந்தம் உயிர் ஊட்டியிருக்கிறது. உலக வர்த்தகக் கழகம் உருவாக்கப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்த உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைக்கு இணையாக, தோஹா வளர்ச்சி சுற்றுப் பேச்சு வார்த்தை கருதப்படுகிறது. எனினும், இது பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே, ஹாங்காங் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறது, நயவஞ்சக காங்கிரசு கும்பல். இந்திய நாடாளுமன்றம், ஏகாதிபத்தியங்கள் ஆட்டிப் படைக்கும் ஒரு ரப்பர் ஸ்டாம்ப் தான் என்பது இதன் மூலம் மீண்டும் நிரூபணமாயிருக்கிறது.

காங்கிரசு கூட்டணியை முட்டுக் கொடுக்கும் போலி கம்யூனிஸ்டுகள் ஒருபுறம் ஹாங்காங் மாநாடு குறித்து வர்த்தக அமைச்சர் கமல்நாத்துக்கு ஆலோசனைகள் வழங்கிவிட்டு, இன்னொருபுறம் அதை எதிர்த்து அறிக்கை போர் நடத்தும் பித்தலாட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். திராவிடக் கட்சிகள் உள்ளிட்டு மற்ற கட்சிகளுக்கோ, உள்ளூர் பொறுக்கி அரசியலைவிட, ஹாங்காங் ஒப்பந்தம் ஒன்றும் முக்கியமான தலைபோகும் விசயமாகத் தெரியவில்லை.

1999-ஆம் ஆண்டு அமெரிக்காவின் சியாட்டில் நகரில் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் மூன்றாவது அமைச்சர்கள் மாநாடு தொடங்கியே, உலக வர்த்தகக் கழகத்திற்கு எதிராக உலகின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்ளும் இந்தப் போராட்டங்கள் பெரும்பாலும், போலி கம்யூனிஸ்டுகள், தன்னார்வக் குழுக்கள், பின் நவீனத்துவவாதிகள், அராஜகவாதிகள் என்ற வானவில் கூட்டணியால்தான் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.

''இந்த உலகம் விற்பனைக்கு அல்ல'' போன்ற கவர்ச்சிகரமான ஜனரஞ்சகமான முன் வைத்து இப்போராட்டங்கள் நடத்தப்பட்டாலும், உலக வர்த்தகக் கழகம் ஏழை நாடுகள் மீது திணிக்கும் மறுகாலனி ஆதிக்கத்திற்கான தீர்வை, இந்த ஏகாதிபத்திய கட்டமைப்பிற்குள்ளேயே இவை தேடுகின்றன. இதன் காரணமாகவே, ஏழை நாட்டு விவசாயிகளையும், மாணவர்களையும், இளைஞர்களையும் திரட்டி நடத்தப்படும் இந்தப் போராட்டங்கள், ஒரு அடையாள எதிர்ப்பு என்பதைத் தாண்டி வளர்த்துச் செல்லப்படுவதில்லை. இது மட்டுமின்றி, ஏழை நாட்டு மக்களின் மறுகாலனி ஆதிக்கத்திற்கான எதிரான கோபத்தை மழுங்கடிக்கும் பாதுகாப்பு ''வால்வு''களாகவும் இப்போராட்டங்கள் மாறிவிடுகின்றன.

இதற்கு மாற்றாக, ''சோசலிசமே ஒரே தீர்வு'' என்ற முழக்கத்தின் கீழ், புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை அணிதிரட்டிப் போராடும் பொழுதுதான், உலகமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாதிக்கத்தை முறியடிக்க முடியும்.

**• செல்வம்**


படிப்பகம்

www.padippakam.com

**2-ஆம் பக்கத் தொடர்ச்சி**




**விழுப்புரம் நகரில் கொலைக் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம்.**

கூடியிருந்த வேளையில், போலீசு தடைகளை மீறி நடந்த இக்கொடும்பாவி எரிப்புப் போராட்டம் அனைவராலும் பரபரப்பாக வரவேற்கப் பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணித் தோழர்கள் கைது செய்யப் பட்டு சிறையிடப் பட்டனர். பின்னர், 22.12.05 அன்று பனகல் கட்டிட நுழை வாயிலருகே, கைது செய்யப்பட்ட தோழர்களை விடுதலைச் செய்யக் கோரியும், கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. திரளான உழைக்கும் மக்கள் திரண்டு நின்று கொலைகார அரசுக்கு எதிரான தமது வெஞ்சினத்தை வெளிப்படுத்தினர்.

**திருச்சியில்** 19.12.05 அன்று காலை புத்தூர் நாலு ரோட்டில் கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும் பலியானோர் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம் வீதம் இழப்பீடு வழங்கக் கோரியும் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தி, கொலைகார ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தையும் நடத்தினர். திருச்சி நகரையே அதிர வைத்த இந்த ஆர்ப்பாட்டம் - கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தைத் தடுத்த போலீசு, 6 பெண் தோழர்கள் உள்ளிட்டு 20 தோழர்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது.

**மதுரையில்,** ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் சார்பாக, வெள்ள நிவாரணப் படுகொலைக்குக் காரணமான அதிகாரிகள், போலீசாரைக் கைது செய்து தண்டிக்க கோரி 19.12.05 அன்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இக்கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தின் பொழுது முன்னணியாளர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டனர்.

**கடலூரில்** 19.12.05 அன்று மதியம் பு.மா.இ.மு. தோழர்கள் சுப்பராயலு பூங்கா எதிரில் உள்ள நாலுமுனைச் சாலையில் கொலைகார ஜெயா அரசை எதிர்த்து, ஜெயலலிதாவின் உருவப் பொம்மை எரிப்புப் போராட்டத்தை நடத்தினர். கொலைக் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்தக் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைத் தாக்கிய போலீசு, முன்னணியாளர்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது.

**நெய்வேலியில்,** 19.12.05 அன்று மாலை மந்தாரக்குப்பம் நாலுமுனை ரோடு அருகே, பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து, கொலைக் குற்றவாளிகளான பாசிச ஜெயா உள்ளிட்டு போலீசுத்துறை - வருவாய்த்துறை அதிகாரிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரி மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தொழிலாளர்கள், இளைஞர்கள், வழக்குரைஞர்கள் தமது குடும்பத்தோடு திரண்டு வந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், கொலைக் குற்றவாளிகளுக்கு எதிரான வெஞ்சினத்தை உழைக்கும் மக்களிடையே மூண்டெழச் செய்வதாக அமைந்தது.

தர்மபுரி மாவட்டம் **பென்னாகரத்தில்,** "42 பேர் பலியான சம்பவம் விபத்து அல்ல; படுகொலை! கொலைகார போலீசையும் அதிகாரிகளையும் ஏவிவிட்ட ஜெயா அரசைத் தூக்கியெறிவோம்!" என்ற முழக்கங்களுடன் வி.வி.மு. உடனடியாக சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதைக் கண்டு பீதியடைந்த போலீசுத்துறை, மறுநாள் ஒரு போலீசுக்காரரை ஏவி, அவற்றைக் கிழித்தெறிய முயற்சித்தது. தோழர்கள் அப்போலீசுக்காரரைச் சூழ்ந்து கொண்டு கேள்வி எழுப்பியதும், இது எங்க மேலதிகாரி உத்தரவுங்க என்று கூறி விட்டுத் தவறுக்கு வருத்தம் தெரிவித்து நழுவிச் சென்றார். இச்சுவரொட்டி இயக்கமும், கொலைக் குற்றவாளிகளைத் தண்டிப்போம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுர பிரச்சாரமும் பகுதி வாழ் மக்களைப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

**கோவையில்,** 21.12.05 அன்று மாலையில் காந்திபுரம் - தமிழ்நாடு உணவகம் முன்பாக ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து "கொலைக் குற்றவாளிகளைத் தண்டிப்போம்! கொலைகார ஜெயா அரசைத் தூக்கியெறிவோம்!" எனும் மைய முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தின. எந்தவொரு அரசியல் கட்சியும் இப்படுகொலையைக் கண்டித்து மக்களைத் திரட்டிப் போராடாத நிலையில், பெண்கள்-குழந்தைகளுடன் செங்கொடி ஏந்தி நடந்த இந்த ஆர்ப்பாட்டம் மக்களின் தயக்கத்தை உடைத்துப் போராட அறைகூவுவதாக அமைந்தது.

**விழுப்புரத்தில்** 21.12.05 அன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து "42 பேர் பலியான சம்பவம் விபத்து அல்ல; போலீசுதுறை - அதிகார வர்க்கத்தின் கூட்டுக் கொள்ளைக்காக நடந்த படுகொலை! கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்!" எனும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. பலியானோர் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம் நட்டஈடு வழங்கக் கோரியும், வெள்ளத்தால் பயிர்கள் அழிந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 வீதம் இழப்பீடு வழங்கக் கோரியும், வெள்ள நிவாரணத்தை வரவிருக்கும் தேர்தலுக்கான லஞ்சமாக மாற்றியுள்ள பாசிச ஜெயா அரசை எதிர்த்தும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் கொலைகார அரசுக்கு எதிராகவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காகவும் போராட்டங்கள் தொடர்கின்றன.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**



Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05




கோவையில்...



மதுரையில்...

# சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 42 உயிர்களைக் காவு வாங்கியுள்ள சம்பவம் ஒரு விபத்தல்ல, படுகொலை!



வெள்ள நிவாரணத்தில் கொள்ளையடிப்பதற்காக பல்லாயிரம் மக்களை ஒரே இடத்தில் குவித்து 42 பேரைக் கொன்ற அதிகாரிகள், போலீசை கொலைக் குற்றத்தில் கைது செய்!

கொல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 இலட்சம் நட்டஈடு கொடு!

கொலைகார ஜெயா அரசைத் தூக்கியெறிவோம்!

## தமிழமெங்கும் பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டங்கள்! ஆர்ப்பாட்டங்கள்!!



திருச்சியில்...



கடலூரில்...

படிப்பகம்